REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 28 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 322 ஐப்பசி 2 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 18 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி




## சீனாவுக்குப் பதிலடி

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்தது டில்லி



**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 18**

**இந்தியா – அமெரிக்காவைச் சீண்டும் விதத்தில் சீன அரசு ராஜபக்ச அரசுடனான நெருக்கத்தை பகிரங்கமாகத் தொடர்ந்து வெளிப்படுத்தி வரும் நிலையில், அதற்குப் பதிலடியாக தமிழர் விவகாரத்தை இந்திய மத்திய அரசு கையிலெடுத்துள்ளது என அறியமுடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், இந்திய அரசின் உயர் மட்டத்தினர் டில்லி வட்டாரங்கள் விரைவில் பேச்சு நடத்தவுள்ளனர். இதற்கான அழைப்பை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுத்துள்ளது** 25 ➤ **என நம்பகரமாக அறியமுடிகின்றது.**

## சிப்பாய் சாவு

கொடிகாமம், ஒக்.18
வெற்றிலைக்கேணி 553ஆவது படைப் பிரிவு முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தவறான முடிவு 25 ➤

## வாள்வெட்டில் முதியவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 18
புன்னாலைக்கட்டுவன் வடக்கில் நேற்று மாலை இடம்பெற்ற வாள் வெட்டில் 62 வயது முதியவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா 25 ➤

## கோப்பாய் விபத்தில் குடும்பஸ்தர் சாவு!

*நேற்றுச்சோகம்*

யாழ்ப்பாணம், ஒக். 18
கோப்பாய் சந்தியில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளும், டிப்பரும் மோதி 25 ➤

## கேே.கே.எஸ்ஸில் மற்றொரு சிப்பாய்க்கும் கொரோனா

*அவர்கள் பயணித்த விவரங்கள் வெளியீடு*



**021 222 6666**

யாழ்ப்பாணம், ஒக். 18
காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும் மற்றுமொரு கடற்படைச் சிப் 25 ➤

## குழப்பவாதி வந்ததால் கூட்டம் புறக்கணிப்பு

*அனந்தி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 18
கடந்த காலங்களில் கூட்டமைப்பில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு முக்கிய காரணகர்த்தாவாக நாடாளு 25 ➤

## ‘ரிஷாத் கைது’ அரசியல் பழிவாங்கல் அல்ல



கோத்தாபய ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 18
“முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைக் கைது செய்யும் நடவடிக்கைக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இது அரசின் திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல் என்று எதிரணியினர் கூக்குரல் இடுவதைப் பார்க்கும்போது சிரிப்பாக 25 ➤

## குடத்தனையில் சிலர் தனிமைப்படுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 18
வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் வீதிச் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட 25 ➤

## ‘2,000’ஐ கடந்தது 'கொரோனா'

*நேற்றும் 121 பேர் அடையாளம்*

கொழும்பு, ஒக். 18
இலங்கையில் மேலும் 121 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அரச 25 ➤

## தமிழ்த் தேசியக் கட்சிகள் கட்டமைப்பாக இயங்குவதை ஆராய்வதற்கு குழு நியமிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18
தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளும் கட்டமைப்பு ரீதியாக செயற்பட வேண்டும் என்று விருப்பம் வெளியிட்டுள்ளனர். அது 04 ➤

## ரிஷாத்தை கைது செய்ய கால அவகாசம் தாருங்கள்

கோருகிறார் *கமால் குணரத்ன*

கொழும்பு, ஒக். 18
ரிஷாத்பதியுதீனைக்கைது செய்ய பொலிஸ் அதிகாரிகளுக்கு சிறிது அவகாசம் வழங்குமாறு பாது 25 ➤

## வவுனியாவில் இருவர் கோரமாகக் கொலை!

- ஒருவர் ஆபத்தான நிலையில்!
- சந்தேக நபர் கைது

வவுனியா, ஒக். 18
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணிக்கர்வளவில் வீடொன்றில் இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். 26 ➤

அதிகாரிகளின் மிருகத்தனமான செயலைக் கண்டித்து

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாளை சுகவீன விடுப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.18
கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்படாத நிலையில் அவர் நீண்ட தூரம் பயணித்து பணிக்குச் சென்று வந்த நிலையில், 26 ➤

**விற்பனைக்குண்டு**
பழைய ஓடு, மரங்கள், வேப்பமரங்களும் விற்பனைக்குண்டு.
076 030 6689

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

# பேருந்து நிலையத்தில் மீண்டும் குழப்பநிலை!

வவுனியா, ஒக். 18

வவுனியா பேருந்து நிலையத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சாரதிகளுக்கும், தனியார் போக்குவரத்துச் சாரதிகளுக்கும் இடையில் நேற்றும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து வவுனியா மாவட்டச் செயலர், பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று சமரசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.



இணைந்த நேர அட்டவணையில் சேவையில் ஈடுபடுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் எனினும் ஒரே நிரலில் இருந்து இரண்டு தரப்புகளும் சேவையில் ஈடுபடுவதால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும். அதற்கு நாம் இணங்கமாட்டோம். இணைந்த சேவை அட்டவணைப்படி தனித்தனி பகுதிகளில் தரித்து நின்றே சேவையில் ஈடுபடுமாறு நீதிமன்றமும் உத்தரவிட்டிருந்தது. எனினும் இலங்கை போக்குவரத்து சேவையை முடக்கும் எண்ணத்துடன் இவ்வாறான சதிச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு சில அரச உயர் அதிகாரிகளும் துணைபோகின்றனர் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள் தெரிவித்தனர். நாட்டில் பல இடங்களில் நடைமுறையில் உள்ள இணைந்த நேர அட்டவணையை வவுனியாவில் மாத்திரம் நடைமுறைப்படுத்துவதற்கு அரச பேருந்துத் தரப்பினர் எதிர்ப்பினை வெளியிடுகின்றனர். அத்துடன் வெளி மாகாணங்களில் இருந்து வருகைதரும் பேருந்துகளை பேருந்து நிலையத்தினுள் அனுமதிக்குமாறும் அவர்கள் கோருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள வைரஸ் பரவலிற்கு மத்தியில் இவ்வாறு செய்வதனால் வைரஸ் பரவல் அதிகம் ஏற்படும் நிலையே உருவாகும். அத்துடன் வெளிமாகாண பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றமுடியும். நாமும் மக்களிற்கான சேவையையே முன்னெடுக்கிறோம். ஒரே நிரலில் நின்று சேவையில் ஈடுபடுவதற்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று தனியார் பேருந்துகளின் சாரதிகள் தெரிவித்தனர். இதையடுத்து பேருந்து நிலையத்தில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

(ம-110)

## ஜொலி பாஷ்' லீக் தொடருக்கான ஏலம் இன்று மாலை

யாழ்ப்பாணம், ஒக். 18

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தவுள்ள ஜொலி பாஷ் லீக் தொடருக்கான ஏலம் ராஜா கிறீம் கவுஸில் இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது கழகமட்ட ரி20 தொடராக இந்தத் தொடர் அமையவுள்ளது. ஜொலி ஸ்ரார் கழகத்தின் வீரர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விபயிலும் வீரர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்று வெளியேறியிருந்தாலும் வேறு கழகங்களில் பதிவுசெய்யப்படாத வீரர்கள் இந்தத் தொடரில் விளையாட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4 அணிகள் தொடரில் பங்கெடுக்கின்றன. ஒவ்வொரு அணிக்கும் தலா 15 வீரர்கள் உங்வாங்கப்படவுள்ளனர்.

(ம)

## மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 8 பேர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி, ஒக். 18

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். 5 டிப்பர்களும், 3 உழவு இயந்திரங்களும் பொலிஸ் பாதுகாப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

(ம-113)

## வவுனியா கிறிஸ்தவகுளத்தில் இளைஞர்கள் மீது தாக்குதல்!



வவுனியா, ஒக். 18

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்திற்கு உட்பட்ட கிறிஸ்தவகுளம் கிராமத்தில் காணி துப்புரவாக்கும் பணிக்காகச் சென்றிருந்த இளைஞர்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

செட்டிகுளம் பகுதியில் அனுமதிபெற்று காணியொன்றினை துப்பரவாக்கிய பின்னர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த 5 இளைஞர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கியைக் காட்டியும் இளைஞர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இளைஞர்களிடம் இருந்து பணம், நகை போன்றவை அபகரிக்கப்பட்டுள்ளன. வவுனியா மற்றும் செட்டிக்குளம் பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-110,18)

## வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பது இன்றைய சமுதாயத்தின் கடமையாகும்

*தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் வலியுறுத்தல்*



யாழ்ப்பாணம், ஒக். 18

வரலாற்றுச் சின்னங்களையும், பண்டைய கால கட்டடக் கலைகளையும் பாதுகாப்பது எம் அனைவரதும் கடமையாகும் என்று தெரிவித்தார் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார்.

அமெரிக்க இலங்கை மிஷனின் கட்டடக் கலைபற்றி ஓர் ஓவியக் கண்காட்சி கடந்த 15ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிட மாணவர்களினால் நடத்தப்பட்டது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த முப்பதாண்டு கால உள்நாட்டுப் போரினாலும் 1961ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பாடசாலைகள் சுவீகரிப்புச் சட்டத்தினாலும் அமெரிக்க மிஷனின் கட்டடக் கலையைப் பிரதிபலிக்கும் பல கட்டடங்கள் அழிந்துபோயின. எனினும் அவர்கள் அமைத்த விசாலமான அறைகளைக்கொண்ட வீடுகள் பரந்த விறாந்தைகள் பல இன்றும் காணப்படுகின்றன. குளிரூட்டிகள் இல்லாத காலத்தை அவை நினைவுபடுத்துகின்றன. உயர்ந்த குதிரை வண்டில் தரிப்பிடங்கள் இன்னும் சில இருக்கின்றன. தேவாலயங்கள் அமெரிக்காவிலுள்ள தேவாலயங்களை ஒத்திருக்கின்றன. இவற்றைக் காப்பாற்றுவது யாழ். வரலாற்றில் ஆர்வம் கொண்ட ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இந்த ஓவியக் கண்காட்சியைத் தொடர்ந்து ஓர் அருங்காட்சியகமும் அமைக்கப்பட வேண்டும். இதற்கு ஏற்ற இடம் தெல்லிப்பழையேயாகும். ஏனெனில் 1816ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்த அமெரிக்க மதத் தொண்டர்கள் தெல்லிப்பழையையே தமது தலைமைத் தளமாகக் கொண்டிருந்தனர். இந்த அருட்காட்சியகம் பழைய தலைமுறை முற்றாக மறையுமுன்னர் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்றார்.

(ம)

## எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஒக்.18

வடமாகாணத்தின் பல இடங்களில் இருந்தும் பெறப்பட்ட மாதிரிகளை நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தியதில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 200 பேரிடத்தில் இருந்து பெறப்பட்ட இந்த மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இந்த மாதிரிகளின் அடிப்படையிலேயே எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-இ)

## சங்கரி நலம்பெற வேண்டி பிரித் ஓதி, நூல்கட்டி ஆசி



கொழும்பு, ஒக். 18

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி நலம்பெற வேண்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் பிரித் ஓதி, நூல் கட்டி ஆசி வழங்கியுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி திடீர் சுகயீனம் காரணமாகக் கடந்த வாரம் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்ட பின்னர் வீடுதிரும்பிய ஆனந்த சங்கரியை நேற்று மாலை அவரது வீட்டுக்குச் சென்ற அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நலம் விசாரித்ததுடன், விரைவில் நலம்பெற வேண்டி ஆசி வழங்கினார். (மஇ)

# 20 ஆவது திருத்தம் குறித்து தீர்க்கமான முடிவெடுங்கள்

## அரசிடம் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 18

**நாட்டின் தற்போதைய அசாதாரண நிலைமையில் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் அரசு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.**

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் 20ஆவது திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் எதிர்வரும் 20ஆம் திகதி சபாநாயகரினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் இரா. சம்பந்தனிடம் 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'20ஆவது திருத்தச் சட்ட வரைவில் உள்ள அனைத்து சரத்துக்களையும் நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மட்டும் நிறைவேற்ற உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அவற்றுக்கு மக்கள் ஆணைபெற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரமே 20ஆவது திருத்தத்தை அரசு கையாள வேண்டும். எனினும், நாட்டின் தற்போதைய நிலைமை அதற்குச் சாதகமாக இல்லை. கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் நாடு சிக்குண்டு இருக்கையில் 20ஆவது திருத்தம் விவகாரத்தில் அரசு ஏன் அவசரம் காட்டுகின்றது? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. எனவே, நாட்டின் தற்போதைய அசாதாரண நிலைமையில் 20ஆவது திருத்தம் தொடர்பில் அரசு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்' என்றார். (ம-22)

# போதையில் முரண்பட்டு மனைவிக்கு கத்திக்குத்து


## கணவன் தலைமறைவு

கிளிநொச்சி, ஒக். 18

கணவனின் கத்திக்குத்துக்கு இலக்கான மனைவி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கணவர் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது. மதுபோதையில் இருந்த கணவன் மனைவியுடன் முரண்பட்டு கத்தியால் குத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது. காயமடைந்த மனைவி தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு



வவுனியா, ஒக். 18

வவுனியா புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரசங்குளம் பகுதியில் தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். 52 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார். அவருக்கு 4 பிள்ளைகள். புளியங்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-110)

# கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் கவனம்

## பிரதமர் அலுவலகம் அறிக்கை

கொழும்பு, ஒக். 18

தேசிய பொருளாதார அபிவிருத்தியைப் போன்றே கிராமிய பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்கு அரசு முக்கிய கவனம் செலுத்தியுள்ளது. கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக செயற்படுத்தப்படும் இவ்வாறு பிரதமரின் அலுவலகம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு குழு, வாழ்வாதார மேம்பாட்டு குழு, உள்நாட்டு உற்பத்தி துறையை ஊக்குவிப்பதற்கான அபிவிருத்தி குழு, கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு குழு ஆகிய நான்கு குழுக்களின் மூலம் நாடளாவிய ரீதியில் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை செயற்படுத்தும்போது மாகாண மட்ட, மாவட்ட மட்ட, பிரதேச மட்ட மற்றும் கிராமிய மட்ட அமைச்சுக்களில் வேலைத் திட்டங்களை தயார்ப்படுத்தி கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையிலான விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிரதான நான்கு குழுக்களில் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குழு தலைவர்கள் ஆகியோர் உள்ளடங்குவதுடன், அந்தந்த மாகாணங்களின், மாவட்டங்களின், பிரதேச அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதேச மற்றும் கிராம மட்டத்திலான அரச அதிகாரிகள் உள்ளடங்குவர்.



இந்த தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்களை தெளிவூட்டும் வகையில் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச, கடந்த தேர்தல்களின் போது சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் கீழ் அரசாங்கம் முன்வைத்த கிராம மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட அமைப்பொன்றை உருவாக்குதல் தொடர்பான முன்மொழிவை நிறைவேற்றுவதற்கு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியை திறம்பட பயன்படுத்தக்கூடிய வகையில் செயற்படுதல் இந்த தேசிய வேலைத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த குழுக்கள் மாவட்ட மட்டத்தில் ஒன்றுகூடும் சந்தர்ப்பத்தில் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் தலைமை அதிகாரிகளின் பிரதேச அதிகாரிகள் ஆகியோரை அதில் இணைத்து கொள்வதன் மூலம் திட்டங்களை மிகவும் திறமையாக தொடங்க முடியும் என்று நம்பப்படுகிறது - என்று தெரிவித்தார். (ம-இ)

# துணிவு இருந்தால் நீதிமன்றில் சரணடைய வேண்டும் ரிஷாத்



## அமைச்சர் மஹிந்தானந்த சவால்

கொழும்பு, ஒக். 18

'அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவு அரசுக்குத் தேவையில்லை. அரசு அவரின் ஆதரவைப்பெற முயற்சிக்கவும் இல்லை. தான் குற்றமற்றவர் என்ற துணிவு ரிஷாத்துக்கு இருந்தால் முதலில் அவர் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ரிஷாத் பதியுதீனின் ஆதரவு இல்லாமலே 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது. ரிஷாத் பதியுதீன் தான் கைதுசெய்யப்படுவதைத் தவிர்க்க வேண்டுமாயின் முதலில் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும். தான் குற்றமற்றவர் என்பதை அங்குதான் அவர் நிரூபிக்க வேண்டும். என்றார். (ம-22)

**ALTO கார் விற்பனைக்கு**
மாருதி சுசுக்கி அல்டோ
வகைகள் உடன் விற்பனைக்குண்டு
CAI தொடரிலக்கம் கொண்டது.
தரகர் தேவை இல்லை.
077 482 5587, 077 346 0397

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுரம் அம்மன் கோயில் முன்வீதி மெயின் றோட்டுடன் 12 பரப்பு காணி உள்ளது.
பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக.
விலை 1 பரப்பு 350,000/-
(மூன்று லச்சத்தி ஐம்பதாயிரம்)
தரகர் தேவையில்லை
0766400974, 0779986806

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு மில் றோட்டில் நாகதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக் கப்பட்டும் (2 பரப்பாக).
1 பரப்பின் விலை 350,000 லட்சம்.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 076 888 4625

**வேலையாள்கள் தேவை**
திருநெல்வேலியில் அமைந்துள்ள
கட்டடப் பொருள் விற்பனை
நிலையத்திற்கு (Hard ware Shop)
அனுபவம் உள்ள ஆண் / பெண்
இருபாலார் தேவை.
077 239 7898, 077 593 4206

**Thenu Super Mart**
திருநெல்வேலியில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு வேலைக்கு ஆள் தேவை.
காசாளர் (Chasier)
பொருள் காட்சிப்படுத்துனர் (Display)
ஆண் , பெண் இருபாலாரும்
முன் அனுபவம் வாய்ந்தவர் விரும்பத்தக்கது.
077 711 0075

**காணி விற்பனை**
யாழ். நகர்ப்புறப் பகுதியில் கடைத் தொகுதி கட்ட உகந்த காணி செம்மா தெரு ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில்
22 அடி அகலமும் 140 அடி நீளமும் கொண்ட
காணி விற்பனைக்குண்டு
தொடர்பு: தே.வரதராசா
077 411 8851, 077 321 5353

### ராஜபக்சக்களுக்கு எதிராக போர்க் கொடி தூக்கிய

# ஆளும் கட்சி எம்.பி. விஜயதாஸவின் பாதுகாப்பு திடீரெனக் குறைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 18

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள சிறிலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்சவின் பாதுகாப்பு திடீரெனக் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஸவுக்கு 5 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும், தற்போது 2 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக் கடமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ராஜபக்ச அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிராகவும், ரிஷாத் பதியுதீனை அரசே பாதுகாத்து வருவதாகவும் அவர் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்த நிலையில் அவரின் பாதுகாப்பு திடீரெனக் குறைக்கப்ப ட்டுள்ளது. (ஓ,5,22)

## மரண அறிவித்தல்



மனம் மகிழ 21 • 04 • 1938

மனம் நெகிழ 15 • 10 • 2020

### திருமதி பரமேஸ்வரி சபாபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் கைதடியைப் பிறப்பிடமாகவும் ரொறன்டோ கனடாவை (Toronto Canada) வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சபாபதிப்பிள்ளை கடந்த (15.10.2020) வியாழக்கிழமை கனடாவில் சிவபதப்பேறு பெற்றார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் செல்லம் தம்பதியரின் மூத்த புத்திரியும், சபாபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், ஜெயக்குமார், ஜெயலஷ்மி, சரோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தில்மணி (கைதடி), வசந்தா (ஜேர்மனி), நிர்மலன் (கனடா), நிர்மலராஜன் (சுவிஸ்), நிர்மலகாந்தன் (கனடா), நிர்மலகுமார் (கனடா), குணாளன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவீந்திரன் (ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர், கைதடி), யோகநாதன் (ஜேர்மனி), சுபரூபி (கனடா), தபோநிதி (சுவிஸ்), அனுசியா (கனடா), பத்மவாசினி (கனடா), சுஜிதா (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியும், நிரூபன், சுதர்ஜினி, மாலவியா, சங்கியா, அபிநயன், ஆத்மிகன், தர்மித், மகிழன், மகிழினி, அபிஷகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரவீந்திரன் (மருமகன், கைதடி.)
தொ.பே: 076 158 1250

## மரண அறிவித்தல்



தோற்றம் • 19 • 02 • 1937

மறைவு • 17 • 10 • 2020

### நவரத்தினம் பாலமணி

சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பாலமணி நேற்று (17.10.2020) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் இராசம்மா தம்பதியரின் மகளும், காலஞ் சென்ற கதிரேசு நவரத்தினத்தின் (பொலிஸ் உத்தியோகத்தர்), அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரேசு சின்னக்குட்டி தம்பதியரின் மருமகளும், சிறிரஞ்சினி (பவி) ரதனி (சசி-கனடா) துஷ்யந்தினி (துசி-நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சூரிய மூர்த்தி, தங்கராசா (கனடா), ரவீந்திரராஜா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், தனபாலசிங்கம் (லண்டன்), மனோன்மணி (வவுனியா) அருந்தவதேவி (வவுனியா), கனகாம்பிகை (ஜேர்மன்) சறோஜினி தேவி (வவுனியா) ஆகியோரின் சகோதரியும், பூமணி, நாகலிங்கம், முருகையா, வீரபாகு, ராசநாயகம், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அன்னபாக்கியம், மாணிக்கர், சுப்பிரமணியம், துரைசிங்கம், சிந்தாமணி ஆகியோரின் மைத்துனியும், கஜேந்திரன் கௌசிகா, சுரேஸ்குமார் சோபிதா, நிறோசன் (கனடா), சயன், சயனா (கனடா), கிறுசோத் (கனடா) ஆதுனா (நோர்வே), தாமிரா (நோர்வே), அபிசாந் (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் சபரீஸ், பரீட்சித் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சி.....

*கட்டமைப்பாக...*

தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக கட்சிகளை உள்ளடக்கிய 5பேர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர் இளம்கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் கூடிக் கலந்துரையாடின. கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குகின்ற கட்சிகள் இன்று மீண்டும் கூடி ஆராய்ந்தோம். இந்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கட்டமைப்பு ரீதியாக செயற்பட வேண்டும் என்று கலந்துகொண்ட அனைத்து பிரதிநிதிகளும் தங்களது விருப்பத்தை தெரிவித்துள்ளனர். அதற்காக நாம் குழுவை நியமித்துள்ளோம். அமைப்பு ரீதியாக எவ்வாறு நாம் செயற்பட வேண்டும். எவ்வாறு நாம் ஸ்தாபன ரீதியாக அமைய வேண்டும் என்று அந்தக் குழு ஆராயவுள்ளது. அவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளனர்.

நாம் அந்த அறிக்கை தொடர்பில் ஆராய உள்ளோம். மேலும் இன்றைய கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எனினும் நாம் தமிழ்தேசியப் பரப்பில் தொடர்ந்து அனைத்து கட்சிகளும் ஒன்றாக இயங்குவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பேசவுள்ளோம், என்றார்.

இதேவேளை நேற்றைய கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் ஒரு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகள். ஒவ்வொரு பிரச்சினைக்கும் கூடிக் கலந்தாய்வது என்றில்லாமல் ஒரு நிறுவன ரீதியாக தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்படவேண்டும் என்ற முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ரெலோவைச் சேர்ந்த விந்தன் கனகரட்ணம் மற்றும் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் ஆகியோர் ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளனர். (ஓ,5,20,26)

## மரண அறிவித்தல்



### செ.செல்வராசா (வீரகத்தி)

(பிரபல மாட்டுச்சவாரி ஓட்டுநரும்)

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் 24/3 திருவையாறு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செ.செல்வராசா (வீரகத்தி) நேற்று முன்தினம் (16.10.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், மற்றும் செல்லம்மாவின் அன்புக் கணவரும், கோபிநாத், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மொட்டைப்பாலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24/3, திருவையாறு, கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு • 14 • 12 • 1937

இறப்பு • 17 • 10 • 2020

### சுந்தரமூர்த்தி மரகதம்

கோண்டாவில் மேற்கு, சீக்கோலேனை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி மரகதம் நேற்று (17.10.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், கிருபாகரன் (லண்டன்), காலஞ்சென்ற கருணாகரன், ரேணுகா, கீதா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், சிவராசா (காமதேனு), அல்லி (லண்டன்), கவிதா (கோண்டாவில்) ஆகியோரின் மாமியாரும், விதுரன், சர்மிலன், நிருஜா, கம்சாயினி, நிலாணி (லண்டன்), நிசாந்தினி (லண்டன்), நிஜந்தா (லண்டன்), அஜந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி, கண்ணகியம்மன்
முதலாம் ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்
021 225 0918 (மகன்)
076 883 8217 (பேரப்பிள்ளைகள்)

# தவறான வார்த்தைகளால் அந்தரிக்கும் நோயாளர்கள்

## எம்.பி அரவிந்தகுமார் அவசர கடிதம்

பதுளை, ஒக்.18

பதுளை மருத்துவமனையில் தவறான வார்த்தைப் பிரயோகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் பதுளை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.




அதில், பதுளை மாவட்டமானது தமிழ் பேசும் மக்கள் கணிசமாக வாழும் பிரதேசமாகும். மருத்துவமனை அறிவித்தல் பலகைகளில் தமிழ் மொழியில் முற்று முழுதாக தவறான வார்த்தைப் பிரயோகங்களும், ஆங்கில மொழியில் பிழையான உச்சரிப்பும் காணப்படுகின்றன. இதனால் சிங்கள மொழி புரியாத தமிழ் மொழி மட்டும் தெரிந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் மருத்துவமனை ஊழியர்களிடம் வினவினாலும் உரிய பதில் கிடைக்காமல், தமிழ் நோயாளர்கள் தரக்குறைவாக நடாத்தப்பட்டு வருகின்றனர்.

வெளிநாட்டவர்களுக்கும் இதே நிலைதான். மேற்படி விடயங்களை தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன். சகல நோயாளர்களும் பயன்பெறும் வகையில் இம் மருத்துவமனையை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

நோயாளர் காத்திருக்கும் பகுதி 'நாயாளர்கள் பகுதி' என்றும் மலசலகூடத்தில் ஆண்கள் என்பதற்கு பெண்கள் பகுதியென்றும், பெண்கள் என்பதற்கு ஆண்கள் பகுதியென்றும் மிகத் தவறாக குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சிலவற்றை மட்டும் தங்களின் கவனத்துக்கு முன்வைக்கின் றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# ஓய்வுபெறத் தயாராகிறார் ஜோன் அமரதுங்க

கொழும்பு, ஒக்.18



ஐ.தே.கவின் தேசிய பட்டியல் ஆசனம் வழங்கப்படவில்லை எனில் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தயாராகி வருகிறார் எனத் தெரியவருகிறது. தேர்தலில் தோல்வியடைந்தோரை தேசிய பட்டியல் ஊடாக நியமிப்பதில்லை என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் சம்பிரதாயம் என்பதை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அவர் நினைவூட்டியுள்ளார் எனவும் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் ஜோன் அமரதுங்கவின் பெயரே முதலில் இடம்பெற்றுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தேசிய பட்டியல் ஆசனம் மாத்திரமே கிடைத்தது. பொதுத் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்தக் கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)






# சமூகத் தொற்றாவதை தடுக்கவே வர்த்தமானி

## பவித்திரா விளக்கம்



கொழும்பு, ஒக்.18

**நாட்டை முழுமையாக முடக்காத நிலையில் கொரோனா வைரஸ் இலகுவில் பரவக்கூடும். பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே சமூகத் தொற்றைத் தடுக்க முடியும். அதற்காகவே புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.**

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

விஞ்ஞான பூர்வமாக 4 கட்டங்களாகவே இந்நோய் பரவல் கணிக்கப்படுகின்றது. நோயாளி எவரும் இல்லை என்பது முதல் கட்டமாகும். ஆங்காங்கே நோயாளிகள் அடையாளம் காணப்படுதல் மற்றும் அவர்களின் தொடர்புகளைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும் நிலையே 2 ஆம் கட்டமாகும்.

தற்போது ஏற்பட்டுள்ள கொத்தணிப் பரவல்களே மூன்றாம் கட்ட அலையாகக் கருதப்படுகின்றது. சமூகத்தில் அனைத்து இடங்களிலும் நோயாளிகள் அடையாளம் காணப்படுதல், எங்கிருந்து எப்படி அவர்களுக்குத் தொற்று பரவியது என்பதை கண்டுபிடிக்கமுடியாத நிலை, நான்காம் கட்டம், அதாவது சமூகத்தொற்றாகும். அந்த நிலைக்கு எமது நாடு இன்னும் செல்லவில்லை.

நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படாததால், மக்கள் சுகாதார பாதுகாப்புடன் செயற்படத் தவறும் பட்சத்தில் வைரஸ் பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. அதனாலேயே சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்றவேண்டும் என வலியுறுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டபோது நாடு முழுவதும் இரண்டு மாதங்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தி அதனைக்கட்டுப்படுத்தினோம். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இது இலகுவான வழிமுறை என்ற போதிலும் மீண்டும் அவ்வாறானதொரு கட்டத்துக்குச் செல்லமுடியாது. ஏனெனில் பொருளாதாரம் முடக்கப்படும் என்பதுடன் மக்களின் வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்படும்.

வீண் பயணங்களைக் கட்டுப்படுத்தி மக்கள் வீட்டுக்குள் இருக்கவேண்டும், அத்தியாவசிய தேவைக்கு பொதுவெளிக்குச் செல்லும்போது சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் வந்த பின்னர் கைகளை கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். அப்போதுதான் தொற்றைக் கட்டுப்படுத்தமுடியும். சுகாதார பழக்க வழக்கங்களை பழகிக்கொண்டால் மாத்திரமே வைரஸ் தொற்றிலிருந்து தப்பமுடியும்.

அதேவேளை, நாளாந்த பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. 21 வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்கப்படுகின்றது. என்றார். (எ-44)



## மேய்ச்சல்தரை குடியேற்றம்: எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

மட்டக்களப்பு, ஒக்.18

மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் மேய்ச்சல்தரை காணியில் அத்துமீறி குடியேறியோரை வெளியேற்றுமாறு கூறி ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை மக்கள் தேசியக்கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகர் காந்திப் பூங்காவுக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பண்ணையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும், மயிலந்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையினை கால் நடை பண்ணையாளர்களுக்கு சட்ட ரீதியாக கையளிக்க வேண்டும், கால் நடைகளைப் பராமரித்த காணியை அபகரிக்க வேண்டாம் போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் முன்வைத்தனர். (வ-46)

## கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பு நடவடிக்கை

ஹட்டன், ஒக்.18

நானுஓயா பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பைத் தெரிவித்து சபை நடவடிக்கைகளை நேற்று முன்னெடுத்தனர்.

பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றை தனக்குச் சொந்தம் என தெரிவித்து தனிநபர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இதற்கு தற்போது உள்ள நானுஓயா பொலிஸ் அதிகாரி ஆதரவு வழங்குகிறார் எனவும் சபை நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக செயற்படுகிறார் எனவும் தெரிவித்தே இந்த எதிப்பு நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்திருந்தனர். (வ-இ)



## நான்காவது நாளாகவும் ஆஜரானார் மைத்திரி



கொழும்பு, ஒக்.18

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றைய தினம் சுமார் 3 மணி நேரம் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை பல்வேறு முரணான வாக்குமூலங்களை அவர் வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந் நிலையில் நான்காவது நாளாகவும் நேற்றைய தினம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவரை மீண்டும் எதிர்வரும் ஒக்ரோபர் 22ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஏற்கனவே மைத்திரிபால சிறிசேன, ஒக்ரோபர் 5 மற்றும் ஒக்ரோபர் 12ஆம் திகதிகளில் ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியத்தை வழங்கியிருந்தார். (வ-இ)



திருகோணமலை மாவட்ட மேலதிக செயலராக கடமையாற்றி கடந்த மார்ச் மாதம் ஓய்வுபெற்ற கே.அருந்தவராஜாவுக்கான பிரியாவிடை நிகழ்வு மாவட்ட செயலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (வ-இ)

# 2ஆவது பி.சி.ஆர். சோதனையில் காணாமல் போனது கொரோனா

## ஊடகவியலாளருக்கு தொற்று இல்லை

கொழும்பு, ஒக்.18

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட அரச ஊடக நிறுவன ஊடகவியலாளரின் இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. அதில் அவருக்கு கொரோனாப் பாதிப்பு இல்லை என்று தெரிய வந்துள்ளது.

முதலாவது பி.சி.ஆர் சோதனையின் போது இவர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவந்திருந்தது. இந்



நிலையில் அவருக்கு இரண்டாவது பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது பரிசோதனையின்போது அவர் பாதிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது என சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். பல செய்தியாளர்கள் மாநாடுகளுக்குச் சென்ற அந்த ஊடகவியலாளர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டமை கடந்த வியாழக்கிழமை தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து அந்த நிறுவனம், தனது பணியாளர்கள் அனைவரையும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி அவரை இரண்டாவது தடவை சோதனைக்கு உட்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கடற்றொழில் அபிவிருத்தி: இலங்கை– வியட்நாம் பேச்சு

இலங்கையில் கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மையை விருத்தி செய்வது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் ஒன்றை, இலங்கை - வியட்நாம் ஆகிய நாடுகளுக்கிடையில் மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் பாம் தி பிஜ் நொகெக் ஆகியோருக்கிடையில், மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

2021 - 2025 ஆம் ஆண்டு வரையான வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய இருதரப்பு ஒப்பந்தத்தில், கடலட்டை வளர்ப்பு தொடர்பான தொழில் நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு உட்பட நீர் வேளாண்மை தொடர்பான நவீன முறைகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வது போன்ற விடயங்களை உள்ளடக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

வியட்நாமில் இருந்து துறைசார் நிபுணர்களை வரவழைத்து இறால் வளர்ப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறைகளையும் நீர்வேளாண்மை விருத்தி தொடர்பான விஞ்ஞான ஆய்வுப் பட்டறைகளை நடத்துவது தொடர்பான விடயங்களையும் இருதரப்பு ஒப்பந்தத்தில் உள்ளடக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தலைமையிலான ஆட்சி காலத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வேலைத்திட்டம் 2010 - 2013 ஆண்டு காலப்பகுதியில் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டுள்ளமையை, அமைச்சர் சுட்டிக்காட்டியதுடன், கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் எடுத்து புதிய இருதரப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# ரிஷாத் உடனே சரணடையவும்

## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்து

**கொழும்பு,ஒக்.18**

**தலைமறைவாகியுள்ள ரிஷாத் பதியுதீன் உடனடியாக பொலிஸாரிடம் சரணடைய வேண்டும் என்று அமைச்சர் சீ.பி. ரத்னாயக்க வலியுறுத்தினார்.**

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசு போல் நாம் எந்தவொரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்தின் பிரகாரமே நடைபெறுகின்றன. வர்த்தக அமைச்சில் ஊழல் இடம்பெற்றுள்ளது. அது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ஒரு நாடு, ஒரே சட்டம் என்பதே இந்த அரசின் கொள்கையாகும். எனவே, ரிஷாத் பதியுதீன் சட்டத்துக்கு மதிப்பளித்து உடனடியாகச் சரணடைய வேண்டும். அவ்வாறு செயற்படவேண்டியது மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அவரின் பொறுப்பும் கூட.

20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேறவிடாமல் தடுப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர், தவறுகள் இருந்தால் அவற்றைச் சீர்செய்யலாம். ஆனால் குழப்பக்கூடாது. 20 நிறைவேறிய பின்னர் நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பு இயற்றப்படும். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன" - என்றார்.

அதேவேளை, ரிஷாத் பதியுதீன் சரணடைய வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா உட்பட மேலும் சில ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க-44)

## குணமடைந்தோர் 3,395 ஆக அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.18

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் 10 பேர் குணமடைந்துள்ளனர்.

இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 395 ஆக அதிகரித்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 5 ஆயிரத்து 354 பேரில் ஆயிரத்து 946 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

316 பேர் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். அத்துடன் 13 பேர் இது வரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



# தேசிய பாதுகாப்பு தொடர்பில் அச்சத்திலேயே உள்ளது நாடு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.18**

**கடந்த அரசில் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக நாடு இன்னும் பீதியிலேயே உள்ளது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

"குறிப்பாக 2015 - 2019 வரை நாட்டில் தேசிய பாதுகாப்புமீது சர்வதேச அழுத்தம் இருந்தது. அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி, கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக நாட்டைச் சூழ்ந்திருந்த பயங்கரவாதத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில் உளவுத்துறையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தார்.

விசேடமாக, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு குடியேற்றவாசிகளைக் கையாள சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடவுச்சீட்டு வழங்கும்போது இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டினரின் சுற்றுப்புறங்களை முறையாக ஆய்வு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டு இருந்தது.

ஆனால் கடந்த காலத்தில் அவ்வாறான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. உதாரணமாக, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் ஐ.ஜி.பி மற்றும் பாதுகாப்பு செயலாளர் கூறிய கருத்துக்கள் அவர்கள் தேசிய பாதுகாப்பை எவ்வாறு கையாண்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றன" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)



# மணல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக்.18

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கித்துள் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, மண்மேடு திடீரென இடிந்து விழுந்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில் இலுப்பட்டிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த இராஜசுந்தரம் சஜிந்தன்(வயது-20) என்பவரே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-இ)

# கேகாலை மாவட்டத்தில் பயணக் கட்டுப்பாடுகள்

கேகாலை, ஒக்.18

கேகாலை மாவட்டத்தின் 5 பகுதிகளுக்கு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என கேகாலை மாவட்ட சுகாதார சேவைகள் இயக்குநர் வைத்தியர் பத்மகுமார விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இரியகொல்ல, எம்புலம்பே, பின்ஹெனா, யடயவத்த மற்றும் கிரிவல்லிபிட்டிய போன்ற பகுதிகளுக்கே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் இதுவரை 15 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர், இதையடுத்து மொத்தம் 636 பேர் அந்தந்த குடியிருப்புகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் இந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (ந-இ)

# பொடி லாஸ்லிக்கு 90 நாள்கள் தடுப்பு

கொழும்பு, ஒக்.18

குற்றவியல் கும்பல் உறுப்பினரான பொடி லாஸ்லியை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க காலி தலைமை நீதிவான் குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு அனுமதியளித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் கோரிக்கையை பரிசீலித்த பின்னர் காலி தலைமை நீதிவான் ஹர்ஷனா கெகுனாவெல இந்த அனுமதியை வழங்கினார். அதன் பின்னர் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் பிற்பகல் சி.ஐ.டி அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் சிறைச்சாலைத்துறையின் மூத்த அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த வழக்கில் பொடி லாஸ்லி இரண்டாவது சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# துறைமுக பணியாளர்கள் இருவருக்குத் தொற்று

கொழும்பு, ஒக்.18

கொழும்பு துறைமுகத்தின் டொக் யாச்ட் பகுதியில் பணியாற்றும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் குறித்த பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அத்துடன் இப் பகுதிக்குள் பிரவேசிப்பதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும், குறித்த பகுதியில் பணியாற்றிய ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# பிரபல வானொலி அறிவிப்பாளர் விபத்தில் மரணம்

கொழும்பு, ஒக்.18

இலங்கையின் பிரபல வானொலி சேவை அறிவிப்பாளர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

பிரபாஷ்வர வித்தானகே என்ற அறிவிப்பாளரே நேற்றுமுன்தினம் அதிகாலை விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

நுகேகொட, தெல்கந்த பிரதேசத்தில் வீதிக்கு அருகில் வேகமாகப் பயணித்த காரின் கீழ் பகுதி மதில் ஒன்றில் மோதுண்டுள்ளது. இதில் படுகாயமடைந்த அறிவிப்பாளர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வாகனத்தை ஓட்டிய சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ந-இ)

# காப்பக சிறுவர்கள் தப்பிப்பு: உதவிப் பொறுப்பாளர் கைது

பண்டாரவளை, ஒக்.18

பண்டாரவளை சிறுவர் காப்பகத்தின் ஐந்து சிறுவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அதற்கு உதவிய காப்பக உதவிப் பொறுப்பாளர் பண்டாரவளை பொலிஸாரால் நேற்றையதினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெற்றோரால் கைவிடப்பட்ட மற்றும் நீதிமன்ற உத்தரவுக்கமைய இந்த காப்பகத்தில் தடுத்து வைக்கப்பட்ட சிறுவர்களில் ஐவரே நேற்றுக்காலை தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் தகவல் கிடைத்ததும், பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விரைந்து நடவடிக்கை எடுத்து சிறுவர்களை மீட்டமையுடன், குறித்த சிறுவர்கள் தப்பிச்செல்ல உதவிய காப்பக உதவிப் பொறுப்பாளரையும் கைது செய்துள்ளனர்.

அவரை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ந-இ)

# ரிஷாத் பதியுதீன் கைதை எதிர்த்து புத்தளத்தில் கவனவீர்ப்பு போராட்டம்

புத்தளம், ஒக்.18

முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை கைதுசெய்வதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளம் பாலாவியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஜூம்ஆத் தொழுகையின் பின்னர் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

புத்தளம் பாலாவி இளைஞர் அமைப்பு உள்ளிட்ட பொதுஅமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எம்.ஐ.இல்யாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.


இதன்போது 20ஆவது அரசமைப்பு சீர்திருத்தம், தேர்தல் காலங்களில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை என்பனவற்றுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்:

"நாடாளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை இல்லாமல் ஆக்கி சர்வாதிகாரப் போக்குடைய அரசாங்கத்தைக் கொண்டுவருவதற்கே 20ஆவது அரமைப்பு சீர் திருத்தத்தை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. நாட்டில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு உள்ளிட்டவை பாதுகாக்கப்பட வேண்டும். பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளிட்டவையும் சுயாதீனமாக இயங்க வேண்டும்.

ஒரு தனிமனிதனுடைய கரங்களில் அதிகாரங்கள் சென்றடைவதற்கும், 20ஆவது அரசமைப்பு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆதரவு வழங்கவில்லை என்பதற்காக அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது அப்பட்டமான அரசியல் பழிவாங்கலாகும்" -என்றார். (ந-இ)


நவீன வகையிலான
மடிகணனிகள் மற்றும்
ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள்
SINGER®
இடமிருந்து சிறந்த விலையில்
DELL Inspiron (3580)
Pentium Gold Processor
500GB HDD/ 4GB RAM
Genuine Windows 10
15.6" Full HD Screen
Colors : Black / Silver
Free Dell Laptop Bag
Warranty - 1 Year
( Battery & Power adapter 1 Year )
10%
Rs. 71,999 | Rs.12,050
Rs. 3,400 (18 மாதங்கள்)
DELL i3 (3593)
10th Gen intel i3 Processor
1TB HDD/ 4GB RAM
Genuine Windows 10
15.6" Full HD Screen
Colors : Silver / Black
Free Dell Backpack
Warranty - 2 Years
( Battery & Power adapter 1 Year )
10%
Rs. 102,999 | Rs. 17,925
Rs. 4,864 (18 மாதங்கள்)
DELL i5 (3593)
10th Gen intel i5 Processor
1TB HDD/ 4GB RAM
Genuine Windows 10
15.6" Full HD Screen
Colors : Blue / Silver
Free Dell Backpack
Warranty - 2 Years
( Battery & Power adapter 1 Year )
10%
Rs. 146,999 | Rs. 24,525
Rs. 6,942 (18 மாதங்கள்)
HUAWEI (MateBook D15)
AMD Ryzen 5 3500U
256GB PCIe SSD + 1TB HDD
8GB DDR4
Genuine Windows 10
Colors : Silver
Free Backpack
Warranty - 2 Years
( Battery & Power adapter 1 Year )
10%
Rs. 164,999 | Rs. 41,250
Rs. 8,250 (15 மாதங்கள்)
ASUS VivoBook 15
(X512JP-BQ253T)
10th Gen
Intel i5 Up To 3.6 GHz
8GB RAM
1TB HDD
Backlit Chiclet Keyboard
Colors : Gray / Silver
Free Backpack
Warranty - 2 Years
( Battery & Power adapter 1 Year )
10%
Rs. 164,999 | Rs. 27,225
Rs. 7,792 (18 மாதங்கள்)
ASUS VivoBook I7
(X512JP-BQ254T)
10th Gen
Intel i7 Up To 3.9 GHz
8GB RAM
1TB HDD
Backlit Chiclet Keyboard
Colors : Gray / Silver
Free Backpack
Warranty - 2 Years
( Battery & Power adapter 1 Year )
10%
Rs. 189,999 | Rs. 30,975
Rs. 8,972 (18 மாதங்கள்)
SAMSUNG
Samsung Galaxy M01 Core
(1GB+16GB)
(SMG-SM-M013F-16)
16 GB, 1GB RAM
1480 x 720 pixels, 5.3 inches
Android 10.0
8MP + 5MP Selfie
Colors : Blue / Black
1 year warranty
Rs. 15,990 | Rs. 14,990
SAMSUNG
Samsung Galaxy M21
(6GB+128GB)
(SMG-SM-M215F-BU-6)
128 GB, 6 GB RAM
1080 x 2340 pixels, 6.4 inches
Android 10
48MP + 8MP + 5MP +
20MP Selfie
Colors : Blue / Black
1 year warranty
Rs. 45,999 | Rs. 44,699
SAMSUNG
Samsung Galaxy M31
(8GB+128GB)
(SMG-SM-M315F-BU-8)
128 GB, 8 GB RAM
1080 x 2340 pixels, 6.4 inches
Android 10
64MP + 8MP + 5MP + 5MP +
32MP Selfie
Colors : Blue / Black
1 year warranty
Rs. 57,999 | Rs. 55,999
Huawei Nova 7i
(8GB+128GB)
(HU-NOVA-7I)
HUAWEI
128 GB, 8 GB RAM
1080 x 2310 pixels, 6.4 inches
Android 10.0
4 Cameras + Selfie
Colors : Gray / Sakura Pink
Green / Black
1 year warranty
Rs. 47,999 | Rs. 45,599
New Arrival
Huawei Nova 7SE 5G
(8GB+128GB)
(HU-NOVA7SE)
HUAWEI
128 GB, 8 GB RAM
1080 x 2400 pixels, 6.5 inches
Android 10
64MP + 8MP + 2MP + 2MP
+ 16MP Selfie
Colors : Green / Silver / Purple
1 year warranty
Rs. 64,999 | Rs. 61,749
011 5 400 400
www.singer.lk
SINGER






பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் சீனாவுக்கான புதிய தூதுவர் பாலித கோஹன, ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதி சி.ஏ.சந்திரபிரேம, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மொஹான் பீரிஸ், ஜப்பானுக்கான புதிய தூதுவர் சஞ்சீவ் குணசேகர ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது. (ந-இ)

# கொரோனாவின் ஆயுள்காலம் தொடர்பில் சரியான தகவல்கள் இதுவரை இல்லை

## கூறுகிறார் மகளிர் மருத்துவ நிபுணர் உத்பலா



**கொழும்பு, ஒக்.18**
**கொரோனா வைரஸின் ஆயுள்காலம் தொடர்பில் சரியான தகவல் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் மகளிர் மருத்துவ நிபுணர் உத்பலா அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் கையடக்க தொலைபேசி, பேனை, இரும்பு போன்றவற்றில் அதிக காலம் உயிருடன் இருக்கக்கூடும். தற்போது கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவர் மூன்று வாரத்துக்குள் குணமடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அது மனிதனின் உடலுக்கு உடல் மாற்றமடைகின்றது. விசேடமாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இதற்கு முக்கிய பங்களிக்கின்றது.

எப்படியிருப்பினும் கொரோனாவுக்கு உறுதியான மருந்து அல்லது தடுப்பூசி இல்லாத போதிலும் எங்கள் சுகாதார பிரிவுகளினால், நோயாளிகளின் நோய் அறிகுறிக்கமைய சிகிச்சையளித்து குணமாக்க முடியும். உதாரணமாக இருமல் உள்ள கொரோனா நோயாளி ஒருவர் அனுமதிக்கப்படுகின்றார் என்றால், அவரது நோய் அறிகுறிக்கமைய சிகிச்சையளித்து அவரை குணப்படுத்தக் கூடிய சக்தி எங்கள் வைத்தியர்களிடம் உள்ளது.

இந்த கொரோனா வைரஸ், இருமல், தும்மலின்போது பரவுகின்றது. மேலும் யாராவது ஒருவரின் எச்சில்பட்ட இடத்தில் நின்றால் கொரோனா பரவும் ஆபத்து உள்ளது.

விசேடமாக நீங்கள் பெண் என்றால், இந்த நாள்களில் புடைவை அணிந்து பணிக்கு செல்ல வேண்டாம். புடவையின் முந்தானை கீழே படக்கூடும். இதன் மூலம் எச்சில் பட்டு கொரோனா தொற்றக் கூடும். அத்துடன் தேவையற்ற ஆபரணங்கள் அணிவதைத் தவிர்க்க வேண்டும். முகக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்கிக்கொள்ள வேண்டும்- என்றார். (ந-இ)

# செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகத்துக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஒக்.18
நீதியை நிலைநாட்டும் நடைமுறையை செயற்றிறன் மிக்கதாகவும், துரிதமானதாகவும் மாற்றுவதற்காக செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்படவுள்ளது.

இதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரி தாக்கல் செய்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நீதித்துறையில் நிலவும் பிரச்சினைகளை மூன்று வருடங்களுக்குள் தீர்த்து, தேவையான திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சர் ஐந்து குழுக்களை நியமித்துள்ளார்.

இந்தக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றுள்ளது.

நீதிமன்றங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், குற்றவியல் சட்டங்களை திருத்தியமைத்தல், நீதிமன்ற வலைப்பின்னலை டிஜிட்டல் மயமாக்கல், வணிக மற்றும் சிவில் சட்டங்களைத் திருத்துதல் போன்ற பொறுப்புக்கள் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# மூடப்பட்டன வர்த்தக வலய ஆடைத் தொழிற்சாலைகள்!

கொழும்பு, ஒக்.18
கட்டுநாயக்க, சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளைத் தற்காலிகமாக மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அதிக அளவில் இப் பகுதிக்கு விஜயம் மேற்கொள்வதால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# மீன் வியாபாரியான பெண்ணுக்கு கொரோனா!

தெஹிவளை, ஒக்.18
தெஹிவளை கரகம்பிட்டிய சந்தையில் மீன் விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரத்மலானை, சதுன்கம செஞ்சிலுவைச் சங்க வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் 63 வயதான பெண் ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர், காய்ச்சல் காரணமாக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, இவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

# 10 கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்னுடன் ஒருவர் கைது




கொழும்பு, ஒக்.18
கொட்டிகாவத்தை பகுதியில் நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதான நபரிடமிருந்து 10 கோடி ரூபா பெறுமதியான 10 கிலோகிராம் ஹெரோய்ன் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# கடைகளை உடைத்து திருட்டு: கடற்படை அதிகாரி கைது

கொழும்பு, ஒக்.18
கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள கடைகளை உடைத்து சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் (வயது -43) கண்டி, மதுரட்ட பகுதியைச் சேர்ந்தவர் எனவும், கடற்படையில் 22 ஆண்டுகள் பணியாற்றிய இவர் ஓய்வுபெற்ற பின்னர் கட்டுநாயக்கவுக்குத் திரும்பிவந்து தனியார் பாதுகாப்பு சேவைகளில் சேர்ந்து ஆடை தொழிற்சாலைகளில் பணிபுரிந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. (ந-இ)



# கொழும்பு மாநகரில் பி.சி.ஆர். சோதனைகள்

கொழும்பு மாநகர சபையில் 132 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை.

கொழும்பு பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி தினுக குருகே இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மாநகரசபையின் அறக்கட்டளை ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்புடைய 42 பேர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. ஏற்கனவே இந்த அறக்கட்டளை ஆணையாளர் அலுவலகத்தில் ஒருவர் கொரோனாத் தொற்றாளியாகக் கண்டறியப்பட்ட பின்னரே அங்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இந்த அறக்கட்டளை ஆணையாளர் அலுவலகமும் மூடப்பட்டுள்ளது. (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி..!

கொரோனாவின் மூன்றாம் அலையின் தொடக்கப்புள்ளி என இனம் காணப்பட்ட, மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்களும், அவர்களோடு சம்பந்தப்பட்டவர்களும் கூண்டோடு ஏற்றிச் செல்லப்பட்டு தனிமைப்படுத்தல் மையங்களுக்கு உடனடியாகவே அனுப்பப்பட்டிருந்தனர். இப்படி கொரோனாத் தொற்றாளிகளோடு நெருங்கிப் பழகியவர்களைக் கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பியதன் மூலமே முதல் இரு கொரோனா அலைகளையும் இலங்கையால் கட்டுப்படுத்த முடிந்தது. அதே யுக்தியையே மூன்றாம் அலையிலும் இலங்கை பிரயோகிக்கின்றது.

ஒரு தொற்றாளி எங்கெல்லாம் சென்றார். யாரையெல்லாம் சந்தித்தார் என்பதைக் கண்டறிவது உண்மையிலேயே மிகக் கடினமான விடயம். ஏனெனில் இவை எல்லாமே அச்சொட்டாக அந்தத் தொற்றாளிக்கு நினைவில் இருக்காது. அதேவேளை அந்தத் தொற்றாளிகள் ஒன்றும் பிரபல நபர்களும் இல்லை. அப்படிப் பிரபல நபராக இருந்தாலாவது எங்கெங்கே அவர்கள் நடமாடினர், யாரையெல்லாம் சந்தித்தனர் எனப் பார்த்தவர்களாவது சொல்லியிருப்பார்கள். ஆனால் அதற்கும் சந்தர்ப்பம் இல்லை. அப்படியானால் எப்படி தொற்றாளிகளோடு தொடர்புடையவர்களைக் கண்டறிய முடிந்தது? அந்த வேலையைத்தான் இலங்கை புலனாய்வுத்துறை மிகச் சிறப்பாகச் செய்திருந்தது. தொற்றாளியின் செல்போனில் உள்ள 'சிம்கார்ட்' சமிக்ஞையை அடிப்படையாகக் கொண்டு எங்கெல்லாம் அவர் போயிருப்பார் என்பதைக் கண்டறிந்தே கொத்தணித் தொற்றாளர்களை இனம் காண முடிந்தது. ஒரு தனிநபரின் தொலைபேசித் தரவுகளை அணுகவேண்டுமாயின் நீதிமன்ற உத்தரவு அவசியம். ஆனால் அதையெல்லாம் கணக்கில் எடுத்தால் காரியம் நடக்காது என்றெண்ணி, புலனாய்வுத்துறை தன்னிஷ்டப்படி விசாரித்து , கொரோனாவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது.

இப்படி அதுவரை முன்பின் தெரியாத நபர்களைக் கூட அவர்களின் தொலைபேசி உரையாடலை மோப்பம் பிடித்து, அவர்களை மட்டுமல்லாமல் அவர்களோடு தொடர்புடையவர்களையும் கூண்டோடு தனிமைப்படுத்தலுக்கு அனுப்ப முடிந்த அதே புலனாய்வுத்துறையால், முன்னாள் அமைச்சரும், நாடறிந்த முஸ்லிம் அரசியல்வாதியுமான ரிஷாத் பதியூதீனை நான்கு நாட்களாகியும் இன்னும் எங்கிருக்கிறார் எனக் கண்டுபிடிக்க முடியவில்லை. இத்தனைக்கும் அவர் தன்னுடைய சட்டத்தரணிகளைத் தொடர்புகொண்டு, தன் கைதுக்கு தடை கோரி நீதிமன்றில் வழக்குப் போடச் சொல்லி அதன்படி நடந்தும் விட்டது. அப்படி இருந்தும் கொரோனாத்தொற்றாளிகளையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் கண்ணிமைக்கும் நேரத்தில் கண்டுபிடித்தது போல ரிஷாத்தைக் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதன் மர்மம் மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.

இப்போது அரசுக்கு மக்களின் கவனத்தை 20 ஆவது திருத்த வரைவில் இருந்தும், கொரோனாப் பரவுகை பற்றிய செய்திகளில் இருந்தும் திசைதிருப்ப ஒரு கவனக் கலைப்பான் அரசுக்குத் தேவை. அதனாலேயே ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்த , ரிஷாத் மீது தங்கள் பிடி இறுகுவதாகக் காட்டிக்கொண்டு, மறுபுறம் அதே ரிஷாத்தைக் காப்பாற்றவும் செய்கின்றது அரசு. பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்ற வேலையே இது. இப்படி ஒரு நாடகம் ஆடுவதற்காக பொலிஸ் முன்னாள் பேச்சாளர் ஜாலிய சேனரத்னவையும் பலிகொடுக்க அரசு தயங்கவில்லை. எவரைப் பந்தாடினாலும் பரவாயில்லை, தங்கள் கதிரை மட்டும் பத்திரமாக இருந்தால் போதுமென்ற அதிகார ஆசையின் வெளிப்பாடே இந்த ரிஷாத் நாடகம். இது வெறும் நாடகமென்று மக்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் தாங்கள் செய்வதையெல்லாம் மக்கள் நம்புவார்கள் என்ற சிந்தனையில் இன்னும் நாடகமாடி, தாங்கள் நினைத்ததைச் சாதிக்கலாமென அரசு எண்ணுகின்றது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான். பார்ப்போம் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி நாடகமாடியே காரியத்தை சாதிக்கப்போகிறார்கள் என்று.

# பயணங்களை மட்டுப்படுத்தவும்

## இராணுவத் தளபதி கோரிக்கை



கொழும்பு,ஒக்.18

**வார இறுதி நாள்களில் முன்னெடுக்கும் பயணங்களை மட்டுப்படுத்தி, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.**

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாத பகுதிகளில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதால், பொதுமக்கள் மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் இராணுவத்தளபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு, கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கமைய, தற்போது அதிக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படும் கம்பஹா மாவட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்க அரசு தீர்மானம்

### சுகாதார அமைச்சு நடவடிக்கை



கொழும்பு,ஒக்.18

தினமும் நடத்தும் பி.சி.ஆர். பரிசோதனைகளை 7 ஆயிரத்து 500 ஆக அதிகரிப்பதற்கு, மேலும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது பரிசோதனை இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள 20 இடங்களில், தினமும் 10 ஆயிரம் பரிசோதனைகள் நடத்த முடியும்.

இதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், கொழும்பு துறைமுகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ள, 7 பி.சி.ஆர். இயந்திரங்களை இதுவரை விடுவித்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றை விடுவித்துக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது தினமும் 10 ஆயிரம் பரிசோதனைகள் நடத்த முடியும். 3 ஆயிரத்து 894 பரிசோதனைகளே நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் கொழும்பு கிழக்கு மருத்துமனையில் தினமும் ஆயிரம் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (க-இ)

## 72 மணித்தியாலத்தினுள் பி.சி.ஆர்.பரிசோதனை

கொழும்பு,ஒக்.18

நாட்டில் இருந்து புறப்படும் அனைத்துப் பயணிகளும், புறப்பட 72 மணி நேரத்துக்குள், பி.சி.ஆர் சோதனைகள் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை இன்று மாலை 6 மணி முதல் நடைமுறைக்கு வரும் என்று கட்டுநாயக்க விமான நிலையம் அறிவித்துள்ளது. (க-இ)

## குடிவரவு திணைக்கள சேவைகள் மீண்டும்

கொழும்பு,ஒக்.18

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் நாளை திங்கட்கிழமை முதல் மக்கள் சேவைகளுக்காகத் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவைகளைப் பெறுவதற்கு அலுவலகத்துக்கு வருவதற்கு முன்பு, பொதுமக்கள் தொலைபேசி இலக்கம் அல்லது திணைக்களத்தின் வலைத்தளம் மூலம் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாதவர்கள் அலுவலக வளாகத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். முடிந்த வரை அருகிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொதுமக்களை திணைக்களம் கேட்டுள்ளது. (க-இ)

## ஊட்டச்சத்தின்மை பட்டியலில் இலங்கைக்கு 64 ஆவது இடம்

கொழும்பு,ஒக்.18

உலக அளவில் 107 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் இலங்கை, பசி மற்றும் ஊட்டச்சத்தின்மை நாடுகளின் பட்டியலில் 64 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கை கடந்த ஆண்டு 66 ஆவது இடத்தில் இருந்தது.

உலகளாவிய, தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் பசி தொடர்பில் அளவிடுவதற்கும், கண்காணிப்பதற்கும், பசிக்கு எதிரான திட்டங்களில் முன்னேற்றம் மற்றும் பின்னடைவுகளை மதிப்பிடுவதற்கும் வருடாந்தக் குறியீட்டு பட்டியல் வடிவமைக்கப்படுகிறது.

தெற்காசிய நாடுகளில் தற்போது இந்தியா 97 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 88 ஆவது இடத்திலும், மியன்மார் 78 ஆவது இடத்திலும், நேபாளம் 73 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 99 ஆவது இடத்திலும் உள்ளன.

இந்தப் பட்டியலில் சாட் 107 ஆவது இடத்திலும், கிழக்குத் திமோர் 106 ஆவது இடத்திலும், மடகாஸ்கர் 105 ஆவது இடத்திலும் உள்ளன.

அறிக்கையின்படி, கிட்டத்தட்ட 690 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** விலை உயர்ந்த பொருள்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். புதிய வாய்ப்புகள் புலப்படும். எதிரிகள் விலகிப் போவார்கள். பெண்களின் நீண்ட நாள் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**இடபம்:** கலைத்துறையினர் போட்டிகளை முறியடிப்பீர்கள். அழகுணர்ச்சி சார்ந்த விஷயங்களில் ஆர்வம் செல்லும். பெரியவர்களுக்கு உதவி செய்து வாழ்த்துப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** சமூக நலப்பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரப் பழக்கங்கள் சிறப்பாக இருக்கும். நீங்கள் மதிக்கும் நபர்களின் பாராட்டுக் கிடைக்கும்.

**கடகம்:** நண்பர்களின் ஆதரவு கூடும். விரும்பிய பொருள்களின் சேர்க்கை உண்டு. எதுவும் நன்மைக்கே. பொறுமையைக் கடைபிடித்து வெல்லுங்கள் விலகிச் சென்றவர்கள் பற்றிக் கவலைப்பட வேண்டாம்

**சிம்மம்:** பணியாளர்கள் வெற்றி காண்பீர்கள். பெற்றோருக்கு நன்மை உண்டு. அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு. வியாபாரத்தை விரிவு படுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** அக்கம் பக்கத்தாரால் ஒரு சில தொல்லைகள் வந்து சேரலாம். சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வது நல்லது.

**துலாம்:** பிள்ளைகளால் பெருமை கூடும். உங்களின் நற்குணத்தால் விலகி நின்றவர்கள் விரும்பி வரு வார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உதவி செய்வார்கள்.

**விருச்சிகம்:** இடையில் தொய்ந்திருந்த வியாபாரம் சூடு பிடிக்கும். பணத் தேவைகள் பூர்த்தியாவதால் மனதில் பரபரப்பு நீங்கும். நண்பருக்கு முடிந்த அளவில் உதவுவீர்கள்.

**தனுசு:** உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். காணாமல் போன முக்கியப் பொருள்கள் கிடைக்கும். பழைய வேலையாட்களை அவசரப்பட்டு மாற்ற வேண்டாம்.

**மகரம்:** பணியாளர்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். கலைத்துறையினரின் முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். பிள்ளைகள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**கும்பம்:** பலநாள்கள் திட்டமிட்ட பொருளை வாங்கி மகிழ்வீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். எதிலும் கவனம் தேவை.

**மீனம்:** நேற்றைய பிரச்சினை இன்று தீர்ந்து நிம்மதியளிக்கும். உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

# சஹ்ரான் தலைமையிலான குழு 20 தாக்குதல்களுக்குத் திட்டம்

## ஆணைக்குழுவில் பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சியம்

கொழும்பு, ஒக்.18
உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சஹ்ரான் ஹாசீம் தலைமையிலான குழு 20 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்தது என உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. 20 தற்கொலைக் குண்டுதாரிகளைக் கொண்டு இந்த தாக்குதல்களை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. முதல் தாக்குதல்களின் பின்னர் மூன்று கட்டங்களாக தொடர் தாக்குதல்களை நடத்த திட்டமிடப்பட்டிருந்தமை சஹ்ரான் குழுவின் பிரதிநிதியொருவரிடம் நடாத்திய விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளன என தாக்குதல் சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் சாட்சியமளித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஆணைக்குழுவின் முன் தெரிவித்துள்ளார். மேலும், 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த இயக்கத்தின் தலைமைப் பதவி தொடர்பில் சஹ்ரானுக்கும் நவுபர் மௌவி என்பவருக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை காணப்பட்டது எனவும் பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## ஈஸிகாஷால் பண மோசடி; சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக்.18
பொலிஸ் உத்தியோகத்தராகத் தன்னை அடையாளப்படுத்தி இலகுவழி பணப்பரிமாற்றம் ஊடாக (ஈஸிகாஷ்) வர்த்தகர்களிடம் பண மோசடி செய்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி அங்கும்புர பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர் வீரக்கெட்டிய பகுதி வர்த்தகர் ஒருவருக்கு கடந்த 5 ஆம் திகதி தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது தான் வீரக்கெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எனவும், கடமைகளுக்காகச் சென்று கொண்டிருந்தபோது அவரது வாகனத்தில் சிறு கோளாறு ஏற்பட்டதாகவும் அதனை பழுதுபார்ப்பதற்காக பணம் தேவைப்படுவதாகவும் கூறி வர்த்தகரிடம் ஈஸிகாஷ் மூலம் பண மோசடி செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் குறித்த வர்த்தகர் வீரக்கெட்டிய பிரதான பொலிஸ் பரிசோதகர் கெலும் சங்கீத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சந்தேகநபர் இவ்வாறு பல்வேறு பகுதிகளிலும் உள்ள வர்த்தகர்களிடமும் தன்னையொரு பொலிஸ் உத்தியோகத்தராக அடையாளப்படுத்தி இலகுவழி பணப்பரிமாற்றல் சேவையூடாக பண மோசடி செய்து வந்துள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ந-இ)

## அமெ. இராஜாங்க செயலாளருக்கு கொவிட் –19 கட்டுப்பாடுகள்

கொழும்பு, ஒக்.18
அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் மைக்பொம்பியோ இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்போது, அவருக்கு எயர்பபிள் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்குவதற்கான விசேட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அவருக்கு எயர்பபிள் முறையின் கீழ் கொவிட்-19 கட்டுப்பாடுகள் பின்பற்றப்படும் என்று அரசாங்கத்தை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில், சீன உயர்மட்டக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்தவேளை இதனைப் பயன்படுத்தினோம், பிரதிநிதிகள் கே-95 முகக்கவசங்களை அணிந்திருந்தனர். சமூக விலகலைப் பின்பற்றினார்கள். ஹோட்டலில் தங்கியிருந்தவேளை ஏனையவர்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள்ளேயே நடமாடினார்கள். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் அமெரிக்காவிலிருந்து மிக முக்கிய பிரமுகர் ஒருவர் விஜயம் மேற்கொள்கின்றமையைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ந-இ)

## உள்நாட்டு வெங்காயம் கொள்வனவு

கொழும்பு, ஒக்.18
பெரிய வெங்காயத்தை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

மாவட்டச் செயலகங்கள் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்றும், ஒரு கிலோ பெரிய வெங்காயம் 100 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)





## பி.சி.ஆர். இயந்திரங்கள் புதிதாகக் கொள்வனவு

கொழும்பு, ஒக்.18
கொரோனா தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளும் பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஐந்து பி.சி.ஆர். இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த இயந்திரங்களில் இரண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவப்படவுள்ளன என்றும், ஏனைய 3 இயந்திரங்கள் அவற்றின் தேவை அதிகம் உள்ள பகுதிகளுக்கு அனுப்பப்பட உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## இரகசியக் கமராக்களை கண்ணுற்ற திருடர் ஓட்டம்

சாவகச்சேரி ஒக் 18

ஆலயத்தினுள் பொருத்தப்பட்டிருந்த இரகசியக் கமராவினால் அங்கு இடம்பெறவிருந்த திருட்டு முறியடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் அண்மையில் கைதடி தச்சன் தோப்பு முருகமூர்த்தி ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் திருட்டை மேற்கொள்ளச் சென்ற திருடர்கள் அங்குள்ள பிரதான கதவினைத் திறக்க எடுத்தமுயற்சி தோல்வியில் முடிந்ததால் அயலில் காணப்பட்ட பனையோலைகளைப் போட்டு கதவை எரித்துள்ளனர். கதவின் ஒரு பகுதி எரிந்த பின்னர் கதவை உடைத்து உள்ளே சென்றபோது ஆலயத்தின் பல இடங்களில் இரகசியக் கமராக்கள் பொருத்தியிருப்பதைக் கண்டு அங்கு பொருள்கள் எதுவும் எடுக்காமல் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். மறுநாள் காலையில் கதவு எரிக்கப்பட்டு உடைக்கப்பட்டதைக் கண்ட நிர்வாகத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அங்கு பொருத்தப்பட்டிருந்த இரகசியக் கமராவின் பதிவுகளைப் பெற்றுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (பு-9)

*பஸ்கள் ஏற்றிச் செல்லாதமையால்*

# உளத் தாக்கத்துடன் பரீட்சையை எதிர்கொண்ட உயர்தர மாணவி!

கிளிநொச்சி, ஒக்.18

**தற்போது நடைபெற்று வரும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்காக காத்திருந்த உயர்தர மாணவியை, பஸ்கள் ஏற்றாததால், நேரம் தாழ்த்திப் பரீட்சைக்குச் சென்ற மாணவி உளத் தாக்கத்துடனேயே பரீட்சையை எதிர்கொண்டுள்ளார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.**

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவிக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது. மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி பனிச்சங்குளம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து பாடசாலைக்கு வந்து சென்றுள்ளார்.

தற்போது உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவி நேற்றைய தினம் தமிழ்ப் பாடப் பரீட்சை எழுதுவதற்காக பனிச்சங்குளம் பகுதியில் காலை7.30 மணியிலிருந்து பேருந் துக்குக்காக் காத்திருந்தார்.3 அரச பஸ்கள் உட்பட பல தனியார் பஸ்களும் அந்த வீதியூடாகச் சென்றபோதும், அவை மாணவியை ஏற்றாமல் சென்றுள்ளன. இதனால் நேரம் தாழ்த்தி, மன உளைச்சலுக்கு உள்ளாகிய நிலையில் மாணவி பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலைகள் சாதாரணமாக நடைபெறும் நேரத்தில் நேரம் தாழ்த்திச் சென்றாலும் தற்போது பாடசாலைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் பாடசாலைச் சீருடையுடன் நிற்கும் மாணவி பரீட்சைக்குத் தோன்றுவதற்கு காவல் நிற்கிறார். அவரை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லாது செயற்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களைப் பஸ்கள் ஏற்றாமல் செல்வது தொடர்பாகப் பலமுறை வவுனியா பேருந்துச் சாலை மற்றும் கிளிநொச்சி பேருந்துச் சாலை என்பவற்றிற்கு முறைப்பாடுகள் தெரிவித்த போதும் எதுவித பயனும் கிடைக்கவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவித்தனர். (பு-422)

## உரத்தைப் பெறவும் ஒன்றுகூட முடியாது

கிளிநொச்சி, ஒக்.18

கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை நிலையங்களில் தற்போது இலவச பசளைக்காக விவசாயிகளை ஒன்றாகக் கூட வைப்பது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கொரோனா அச்சத்தைக் கருத்தில் கொண்டே இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (பு-ரி2)

## ரிஷாத் எம்.பி. சரணடைய வேண்டும்

*இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கோரிக்கை*

ரிஷாத் பதியுதீன் பொலிஸாரிடம் சரணடைய வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ரிஷாத் பதியுதீன் விவகாரம் தொடர்பான விசாரணைப் பொறிமுறைமீது எமக்கும் பலத்த சந்தேகம் உள்ளது. உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதர் ஆகியோரிடம் அறிக்கை கையளித்துள்ளோம். நீதி கிடைக்கும் என நம்புகின்றோம். நீதித்துறையில் நாம் தலையிடவில்லை. எவருடனும் அரசியல் டீலும் இல்லை. நாட்டில்சுயாதீன ஆணைக் குழுக்கள் உள்ளன. அதேவேளை, ரிஷாத் பதியுதீன் நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டும் என்பதே எமது கோரிக்கையும். ரவூப்ஹக்கீமும் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார். எனவே, தலைமறைவாகாமல் சரணடையுமாறு வலியுறுத்துகின்றோம் என்றார். (பு-இ)



மாங்குளம் உயிரிழை அமைப்பின் பயனாளிகளுக்கு, 10 சக்கர நாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை வெளிச்சம் நிறுவனத்தால், பிரான்சில் வசிக்கும் டயான், ஜென்சியின் நிதி உதவியுடன் இந்தச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. (பு-222)

*நல்லூரில்*

## தேக்கங் கன்றுகளை நடுகை செய்வதற்கு திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.18

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் நூறு வரையிலான தேக்கம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. மழைபெய்ய ஆரம்பித்ததும் பொது இடங்கள், விளையாட்டு மைதானங்கள், மயானங்கள் போன்றவற்றில் இந்தத் தேக்கம் மரக்கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார். (பு-17)

## ஊடகவியலாளர்கள் மீது தாக்கு; உறவுகள் கண்டனம்!

முல்லைத்தீவு, ஒக்.18

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்கள் மரக்கடத்தல் காரர்களால் தாக்கப்பட்டதற்கு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கண்டனம் வெளியிட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி மேலும் தெரிவித்ததாவது;

ஊடகவியலாளர்கள் மறைமுகமாகத் தாக்கப்படுவதை நிறுத்த வேண்டும். குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டும். இலங்கையில் ஊடகங்கள் சுதந்திரமாகக் கருத்தை வெளியிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஊடகத்துறை அமைச்சரிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.தற்போது உள்ள ஊடக அமைச்சர் கேகெலியரம்புக்வெல, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெளிநாடுகளில் பெயர்மாற்றங்கள் செய்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார். இது காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டங்களைத் திசை திருப்பி இல்லாமல் செய்தவற்கான செயற்பாடாக அமைகின்றது என்றனர். (பு-19)

### சந்தையில் மதுப் பாவனை

சங்கானை மீன் சந்தையில் மதுப் பாவனையில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் மதியம் வட்டுக்கோட்டை பொலிஸார், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர், தவிசாளர் , சுகாதாரப் பிரிவினர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். (பு-20)

## பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் தொடர்பாக கவனம் எடுக்கவும்

*ஜனாதிபதி, ஆளுநருக்கு பச்சிலைப்பள்ளி தவிசாளர் கடிதம்*

கிளிநொச்சி, ஒக். 18

பச்சிலைபள்ளி பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் தொடர்பாக உடன் கவனம் எடுக்குமாறு சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், ஜனாதிபதி மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்

அந்தக் கடிதத்தில்;

பச்சிலைபள்ளி பிரதேசத்தின் இந்திராபுரம் வீதி, பறவைக்குள வீதி, மற்றும் நரசிம்ம வைரவர் வீதி போன்றவற்றுக்கு புதிதாகக் கடவை அமைக்க வேண்டும். முகமாலை பிரதான வீதி, சின்ன தாளையடி வீதி, தர்மக்கேணி வீதி, வேம்போடுகேணி கச்சார்வெளி இணைப்பு வீதி போன்ற இடங்களில் உள்ள வீதிக்கடவைகள் பாதுகாப்பான கடவைகளாக மாற்றப்பட வேண்டும். இவ் விடயம் தொடர்பாக மிக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (பு-6)

# சுகாதார நடைமுறை கட்டாயம்; மீறினால் தண்டனை நிச்சயம்

## வவுனியா பொலிஸார் எச்சரிக்கை

வவுனியா,ஒக்.18

**சுகாதார நடைமுறைகளைப் பேணுவது தொடர்பில் வவுனியா பொலிஸாரினால் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தல்களை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பொலிஸார் நேற்றுக் காலை வவுனியா நகரமெங்கும் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தனர்.**



இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது;

கொவிட்-19 தாக்கம் அதிகரித்துச் செல்வதால் தேவைக்கேற்ப நகருக்குள் பிரவேசிப்பதுடன் குழந்தைகளை அழைத்து வருவதைத் தவிர்க்கவேண்டும். வங்கிகள், வியாபார நிலையங்களுக்குச் செல்லும்போது கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பது சாலச்சிறந்ததாகும். 20 நொடிகள் கைகளைக் கழுவியே உட்செல்லுங்கள். அத்தோடு சமூக இடைவெளியையும் பின்பற்றுங்கள். வர்த்தக நிலையங்களில் பணிபுரிபவர்கள் கையுறை மற்றும் முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வியாபார நிலைங்களுக்கு முன்பாக கைகழுவுவதற்கான அனைத்து வசதிகளும் செய்து வைத்திருக்கப்பட வேண்டும்.

வாடிக்கையாளர் தனிநபர் இடைவெளியைப் பேணவேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் தங்களால் மீறப்படும் பட்சத்தில் உங்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றனர். (ப-110)

# இருளில் மூழ்கியது சங்குப்பிட்டி பாலம்

கிளிநொச்சி, ஒக்.18

சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட்டு, பட்டொளி வீசிய சங்குப்பிட்டிப் பாலமும் அதனோடு இணைந்த பகுதிகளும், தற்போது இருளில் மூழ்கியுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஏ-9 வீதிக்கு அடுத்ததாக பயணிகளின் பிரதான போக்குவரத்து வீதியாக சங்குப்பிட்டி வீதி உள்ளது. இரவு வேளையிலும் போக்குவரத்து மிகுந்ததாகவே அந்த வீதி காணப்படும். சங்குப்பிட்டிப் பாலம் அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டபோது கேரதீவிலிருந்து சங்குப்பிட்டி வரை வீதியின் இருமருங்கிலும் சூரிய மின்கலத்தில் இயங்கும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டு பாலமும், அதனோடு இணைந்த வீதியும் பட்டொளி வீசியது. எனினும் அந்தச் சூரிய மின்கல மின்விளக்குகள் யாவும் பழுதடைந்துள்ளமையால், தற்போது இவ் வீதி இருளில் மூழ்கியுள்ளது.

பாலத்தை அண்மித்து அமைந்துள்ள சுற்றுலாப் பயணிகள் தரிப்பிடங்களில் இந்த இருளைப் பயன்படுத்தி சமூக சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. அத்தோடு அந்த வீதியூடாக இரவில் பயணம் செய்வோர் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-ரி1)




முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு தேராவில் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பதினாறு குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக நேற்றுமுன்தினம் இந்த நிவாரணம் வழங்கப்பட்டது. நெதர்லாந்தில் உள்ள வெளிச்ச வீடு தேவாலயப் போதகர் மற்றும் அதன் உறுப்பினர்கள் அதனை வழங்கினர். (ப- 222)

# கஞ்சாவுடன் நால்வர் கைது

கிளிநொச்சி, ஒக். 18

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆழியவளை பகுதியில் கஞ்சா விற்பனை தொடர்பாக பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நால்வரிடமும் இருந்து தலா 10 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. இது தொடர்பாக மேலதிக விசாரணை இடம்பெற்று வருகிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-6)

# வல்வை. நகர சபையின் பாதீடு நிறைவேற்றம்

வல்வெட்டித்துறை, ஒக்.18

வல்வெட்டித்துறை நகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் வாக்கெடுப்பின் பின் நிறைவேற்றப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் கடந்த வியாழக்கிழமை சபையின் விசேட கூட்டத்தில் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது. தவிசாளர், உப தவிசாளர் உட்பட 17 உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் அவர்களால் முன்மொழியப்பட்ட ரூபா 51 இலட்சம் பெறுமதியான வேலைத்திட்டங்களையும் 2021இல் முன்னெடுக்க வேண்டிய அவசியமான அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் உள்ளடக்கிய 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை அங்கீகரிக்க சபையைக் கோரிய போது சில உறுப்பினர்களால் வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரப்பட்டது. அதன் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பின் போது 9 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர் 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தனர். அதற்கமைய ஒரு மேலதிக வாக்கால் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ப-26)

# கொரோனா விழிப்புணர்வு

மன்னார், ஒக். 18

கொரோனாத் தொற்றிலிருந்து விழிப்புடன் செயற்படும் வகையில் மன்னார் மக்களுக்கு விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் 'கொரோனா அற்ற சூழலை உருவாக்குவோம்' எனும் தொனிப் பொருளில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) அனுசரணையுடன் அதன் பணிப்பாளர் யட்சன் பிகிராடோ தலைமையில் கடந்த ஆறு நாள்களாக இந்த விழிப்புணர்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (ப-60)

# கரைச்சி சபையில் நிறைவேறிய 100 பிரேரணைகளில் 66 கிடப்பில்

## வெளிப்படுத்தியது ஆர்.ரி.ஐ.

கிளிநொச்சி, ஒக்.18

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020.08.31 வரை நிறைவேற்றப்பட்ட 100 பிரேரணைகளில் இதுவரை 66 பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை, என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 17.09.2020 இல் கரைச்சி பிரதேச சபையிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர் ஒருவரால் கோரப்பட்ட தகவல்களுக்கு அமைவாக சபையால், மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் இடம்பெறுகின்ற சபை அமர்வுகளில் பிரதேச சபை உறுப்பினர்கள் பிரேரணைகளைக் கொண்டுவந்து அவற்றை நிறைவேற்றியுள்ளனர். அந்த வகையில் கடந்த 31.08.2020 வரை 100 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை 34 பிரேரணைகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 66 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு பிரேரணைகளாகவே இருக்கின்றன என்று பிரதேச சபை வழங்கிய தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ப-214)

## சிறுமி துஷ்பிரயோகம்;

# 2 வருடங்களாக தேடப்பட்ட நபருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஒக். 18

சிறுமி ஒருவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியதோடு, கடந்த இரண்டு வருடங்களாகத் தலைமறைவாக இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி-பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் கடந்த 2018 ஆம் ஆண்டு 14 வயது பாடசாலை மாணவியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தி தப்பிச் சென்றார் என்று குற்ற ஞ்சாட்டப்பட்ட சந்தேக நபரை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் தேடினர். எனினும் அவர் சிக்கவில்லை. பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் வந்த சந்தேக நபர், அங்கு தகராறில் ஈடுபடுகிறார் என்று கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்தனர். எனினும் பொலிஸார் வருவதை அவதானித்த சந்தேக நபர் காட்டுப்பகுதிக்குள் தப்பிச் செல்ல முற்பட்டபோது, காட்டைச் சுற்றி வளைத்த பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

குறித்த நபர் விசாரணைகளின் பின் அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்று சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (ப-6)

# "பொன்சாய்" குட்டைச்செடிகள் வளர்ப்புக்கலை

● ஸ்ரீதரன் பரிசன்



இயற்கையில் பெரிதாக வளரக் கூடிய மரங்களைத் திறமையான கத்தரிப்பு மூலமும் அவற்றின் தண்டுகளில்கம்பிகளைச்சுற்றிவளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், உரிய அளவுக்கு வளரவிடாது, முதிர்ந்த மரங்களின் தோற்றத்தில் குள்ளமாகவும், பார்வைக்கு அழகாகவும், இருக்கும்படி சட்டிகளில் வளர்க்கும்முறையேபொன்சாய்எனப்படும். மிகவும்பெரிதாக வளரக்கூடியமரங்களையும்குட்டையாகவளர்க்கும்நுட்பமே இது. ஜப்பானிய மொழியில் 'பொன் " என்றால் தட்டையான கொள்கலன் என்றும்' சாய் என்றால் மரம் என்றும் பொருள்படுகின்றன. 'பொன் சாய்" என்ற பதம் எமக்குஜப்பானைநினைவூட்டினாலும்இதன்பிறப்பிடம் சீனா என்றே வரலாறு கூறுகின்றது .

## வரலாறு

கிட்டத்தட்ட 2000 வருடங்களுக்கு முன் சீனாவில் 'புன் சாய் " என்ற குட்டை மரங்களை வளர்க்கும் பாரம்பரியம் பௌத்த துறவிகள் மத்தியில் தோன்றியது . கி.மு 7 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் சீனாவின் அரச தூதுவர்கள் இந்தக் கலையை ஜப்பானுக்கு அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து ஜப்பானின் ஜென் பௌத்த துறவிகள் மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தியான முறையாக பொன்சாய்களை வளர்க்கத் தொடங்கினர் . நாளடைவில் ஜப்பானியர்கள் பல்வேறு விதமான நுணுக்கங்களையும், நுட்பங்களையும் அறிமுகப்படுத்தியமையால் இன்று பொன்சாய் ஒரு கலையாக உலகம் முழுவதிலும் பிரபல்யம் அடைந்துள்ளது. அழகுக்காக வளர்ப்பது போல் காணப்படும், சட்டிகளில் வளர்க்கப்பட்ட மரங்களின் உருவப் படங்கள் . 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்தியச் சமாதிகளில் காணப்படுகின்றன. இதைத் தொடர்ந்து . நாடோடிகளின் வண்டிகள் விதவிதமான பாத்திரங்களில் மரங்களை ஆசியா முழுதும் காவிச் சென்றதாக அறியப்படுகின்றது . இந்த மரங்கள் மருத்துவத் தேவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களை வழங்கியவை எனத் தெரிகிறது . நவீன பொன்சாய்க் கலை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் தோன்றியதாகக் கருதப்படுகின்றது . இது 7 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 9 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் சீனாவுக்கான அரச தூதுவர்களால் ஜப்பானுக்குக் கொண்டு வரப்பட்டது .

பொன்சாய் பரம்பரையியல் முறையில் குள்ளமான ஒரு தாவரமல்ல . இது முறையாக வளர்ந்து கொண்டிருக்கும் தாவரமொன்றைக் குருத்து மற்றும் வேர்களைக் கத்தரித்தல் போன்ற பல வகைச் செயற்கை முறைகள் மூலம் குள்ளமாக வளர வைக்கப்படுகின்றது. உரிய முறையில் பராமரிக்கப்படும் பொன்சாய்கள் முழு அளவுக்கு வளரும் அவற்றைப் போன்ற தாவரங்களையொத்த ஆயுள்காலத்தைக் கொண்டிருக்க முடியும் . எனினும் பொன்சாய்களுக்கு மிகுந்த பராமரிப்புத் தேவை . நன்றாகப் பராமரிக்கப்படாத பொன்சாய்கள் நீண்டகாலம் உயிர் வாழ மாட்டா.

## ஏற்ற மரவகைகள்

பொதுவாக சிறிய , குறுகலான இலையுதிராத தன்மை கொண்ட மரம் மற்றும் செடி வகைகளே பொன்சாய்க்கு மிகவும் உகந்தவை. கனிகள் மற்றும் மலர்கள் கொடுக்கும் மரங்கள் மற்றும் செடிகளை பொன்சாய் செய்யும் போதுஅழகும்,மதிப்பும்கூடுதலாகஇருக்கின்றன.மரங்களில் மாதுளை , அத்தி , புளி போகன்வில்லா வேம்பு, இலுப்பை, வாகை, ஆல், அரசு, புங்கம் ஆகிய மரவகைகள் பொன்சாய் கலைக்கு மிகவும் ஏற்றவை . சிறிய இலைகள் . பருமனான தண்டு . குறுகலான வடிவம் கொண்ட மரங்களே பொன்சாய்களாகத் தெரிவு செய்யப்படுகின்றன. மலைப்பகுதிகளில் அல்லது குன்றுகளில் காணப்படும் பாறை வெடிப்புகள் நடுவே வளரும் குட்டைமரங்கள்மற்றும்சூரியஒளிகிடைக்காதகாரணத்தால்உயரமாகவளரமுடியாததாவரங்களைஇலகுவில் அழகான பொன்சாய்களாக மாற்ற முடியும் .

பாறை வெடிப்புக்களிலும் பாழடைந்த கட்டடங்களின் சுவர்களிலும் இயற்கையாக வளரும் செடிகள் இயல்பாகவே குட்டையாகக் காணப்படும். இது போன்ற செடிகளின் குட்டைத் தன்மையை எளிதாகப் பயன்படுத்தி பொன்சாய் செடிகளாக மாற்றி விடலாம். மேலும் நாற்றுப் பண்ணைகளில் தொட்டிகளில் நீண்ட நாள்கள் விற்பனையாகாமல் வைக்கப்பட்டிருக்கும் செடிகளும் குட்டையாக வளர்ந்து, முதிர்ந்து காணப்படும். இது போன்று குட்டையாக வளரும் செடிகளை சேகரித்து பொன்சாய் கலைக்குப் பயன்படுத்த வேண்டும் .

## தேவைப்படுபவை

செடி வெட்டும் கத்திரி, அலுமினியம் மற்றும் தாமிரக் கம்பி, கம்பி வெட்டும் கத்தி, குறடு, மண் அள்ளும் கரண்டி போன்ற கருவிகள் பொன்சாய் வளர்ப்பில் பெரிதும் பயன்படுவனவாகும் . பல்வேறான ஆழமில்லாத பூந்தொட்டிகள் பொன்சாய் வளர்ப்புக்குத் தேவைப்படுகின்றன .







பொன் சாய்களை வளர்ப்பதற்குப் பொருத்தமான அகன்ற தட்டையான கொள்கலன்கள் தேவை. செடிகளின் வடிவங்களுக்கேற்ப முக்கோணம், செவ்வகம், வட்டம். நீண்ட வட்டம் போன்ற வடிவிலான ஆழமற்ற தொட்டிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு தேர்வுசெய்யப்படும்தொட்டிகளின்உயரம்15செ.மீற்றருக்கு மேற்படாது இருக்க வேண்டும். பொன்சாய் செடிகளின் வண்ணத்தோடு ஒத்துப்போகும் வகையில் நீலம், பச்சை, பழுப்பு போன்ற நிறங்களுடன் கூடிய தொட்டிகளையே பயன்படுத்த வேண்டும் அல்லது தேவையான வடிவமுள்ள மண்தொட்டிக்கு பொருத்தமான வர்ணம் பூசியும் இதற்குப் பயன்படுத்தலாம். அதன் ஊடகமாக சிறுகற்களைக் கொண்ட ஆற்று மணல் , கரி , காய்ந்த மாட்டெரு , செங்கற் துகள்கள் ஆகியவற்றின் கலவை பயன்படுத்தப்படுகின்றது. உரமிடுவதும் பொன்சாய் தாவரங்களுக்கு அவசியமாகின்றது.

பொன்சாய் வளர்ப்புக்குத் தொட்டிகளின் அடிமட்டத்தில் உள்ள துளையை கம்பி வலை அல்லது உடைந்த மண்தொட்டி துண்டு கொண்டு அமைத்து மேலதிக நீர் மட்டும் வெளியேறுமாறு வைக்க வேண்டும். தொட்டிகளில் முதலில் ஒரு வரிசை சிறிய உடைந்த செங்கல் துண்டுகளை வைத்து அதன் மேல் மண் இருபாகம், மக்கிய சாணம் ஒரு பாகம் மற்றும் மக்கிய இலை ஒரு பாகம் என்ற அளவில் கலந்து நிரப்ப வேண்டும் . தொட்டிக்கலவை நிரப்பிய பின்னர் இத்தகைய தொட்டிகளின் செடியை மாற்றி நட வேண்டும். செங்கல், கருங்கல் துண்டுகள்போன்றவற்றையும்எடுத்துநடுவில்போதிய அளவு தோண்டிய பின்னர், மண் கலவை நிரப்பியும் பொன்சாய்செடிகளைவளர்க்கலாம்.ஒருபொன்சாயை விதையிலிருந்தும், சிறிய மரத்திலிருந்தும் அல்லது தண்டிலிருந்தும் ஆரம்பிக்கலாம் .

## உரக்கலவை

பொன்சாய் செடிகளுக்கு பொன்சாய் வளர்ப்புக்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட உரக்கலவைகளையே பயன்படுத்த வேண்டும். பொன்சாய் செடிகள் மிகவும் சிறிய தொட்டிகளில் வளர்க்கப்படுவதால் மாதம் ஒருமுறை கடலைப் பிண்ணாக்கு மற்றும் வேப்பம் பிண்ணாக்கை ஊற வைத்த கரைசலை ஊற்ற வேண்டும் . புதிய தொட்டிகளில் மாற்றிய ஒரு மாதம் வரை எந்தவிதமான இரசாயன உரமும் இடக்கூடாது. கோடையில் தினம் இருமுறையும் இதர பருவங்களில் ஒன்று அல்லது இரண்டு நாள்கள் இடைவெளியிலும் தேவைக்கேற்ப நீர் ஊற்ற வேண்டும். பொன்சாய் மரங்களுக்குப் போதியளவு நீர், ஒளி, காற்று, உரம் ஆகியவை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இதனால் வீட்டின் உட்புறத்தில் பொன்சாய் மரங்களை வளர்க்கும்பொழுது மேற்கூறியவை தாராளமாகக்கிடைக்கும்இடங்களில்அவற்றைவைக்கலாம். அது மட்டுமன்றி மரத்தின் உயரம், கொள்கலனின் அளவு , தண்டின் விஸ்தீரணம் ஆகியவை உரிய விகிதங்களில் இருக்கும்பொழுது அவை பார்ப்பவர்களது கண்களை அதிகம் கவருகின்றன.

பொன்சாய் மரம் வளரத் தொடங்கி 2 அல்லது 3 வருடங்களானதும் அதன் வேர்களைக் கத்தரிப்பதுடன் வேறு கொள்கலனுக்கு மாற்ற வேண்டும் . குறுகிய வேர்களே அகன்ற , பலமான தண்டுப்பகுதியை உருவாக்கும். செடிகளை மிகவும் குட்டையாக வளர்ப்பது மிகவும் முக்கியமானதாகும். வளரும் நுனிகளை வாரத்திற்கொருமுறை கிள்ளி விடுவதன் மூலம் உயரம் இரண்டு அடிக்கு மேற்செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வளர்ச்சிக் குறைப்பான்களான சைக்கோசெல் அல்லது பி.ஏ போன்ற இரசாயணங்களை லீற்றருக்கு 4 மி.லீ என்ற அளவில் கலந்து தெளிப்பதன் மூலமும் செடிகளைக் குட்டையாக்க முடியும் . மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கொருமுறை செடிகளை புதிய தொட்டிகளில் மாற்ற வேண்டும். தொட்டிகளை மாற்றுவதைஜீன்,ஜ்லைமாதங்களிலேயேசெய்யவேண்டும். இது சமயம் கூடுதலாக வளர்ந்துள்ள மற்றும் காய்ந்து போன வேர்கள், கிளைகள் அனைத்தையும் வெட்டி அகற்றி விடுதல் வேண்டும் .


## வளர்ப்பு

பொன்சாய் செடிகளைப் பல்வேறு வடிவங்களில் வளர்க்கலாம். குடை வடிவம் போன்றவை இவற்றுள் அடங்கும். பொன்சாய் மரச் செடிகளைத் தனி மரமாகவும், இயற்கைக் காடுகள் போன்ற திட்டமாகவும் வளர்க்கலாம். குடை போன்ற வடிவத்தில் செடிகளைப் பயிற்சி செய்வதற்குக் கிளைகளின் நுனிப் பகுதியில் சிறிய கற்களைக் கட்டித் தொங்க விட வேண்டும். தேவையான வடிவங்களை உருவாக்க தாமிரம் அல்லது அலுமினியக் கம்பிகளைக் கொண்டு கிளைகள் மீது சுற்றி ஏற்ற வடிவங்களில் கிளைகளை மாற்றலாம். சுமார் 6 முதல் 8 மாதங்கள் வரை கம்பிகளை அப்படியே விட்டு வைத்துப் பின்னர் அகற்றி விட வேண்டும் . அப்போது கிளைகள் அந்த வடிவத்திலேயே இருக்கும் .

நகர மக்களின் செடி மற்றும் மரம் வளர்க்கும் ஆவலை பொன்சாய் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் . செடிகளை வளர்ப்பதற்கு போதிய இடவசதி இவர்களுக்கு இல்லை. குறுகிய இடங்களிலேயே ஓரளவு முயற்சி செய்தாலே பொன்சாய் செடிகளை வளர்க்கலாம். வீட்டு மாடிகளிலும் இவற்றை வைத்துப் பராமரிக்கலாம். வரவேற்பு அறைகளில் வைப்பதற்கு உகந்த அழகிய பூக்கும் மரங்களையும். பூஜை அறையில் வைப்பதற்கு ஏற்ற ஆல் மற்றும் வேல் போன்ற மரங்களையும் , சாப்பாட்டு அறையில் விரும்பி வைக்கப்படும் அழகிய பூக்கும் சிறு மற்றும் பெரு மரங்களையும் இந்தக் குட்டைச்செடிகள் வளர்ப்புக் கலையின் மூலம் எளிதாகப் பராமரிக்கலாம். மேலை நாடுகளில் இருப்பது போன்று நமது நாட்டிலும் முக்கிய நகரங்களில் பொன்சாய் வளர்ப்போர் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. அழகுக்கலையாகத் தோன்றிய பொன்சாய் கலை இன்று வணிக ரீதியாக வருமானம் கொடுக்கும் தொழிலாகவும் மாறி வருகின்றது. சில நூறு ரூபாக்கள் முதல் பல ஆயிரம் ரூபாக்கள் வரை இந்த பொன்சாய் குட்டைச் செடிகள் விலையாவதில் இருந்து இதன் முக்கியத்துவத்தை உணரலாம். பொதுவாக பொன்சாய் செடிகளின் வயது கூடும் போது விலை மதிப்பு கூடிக் கொண்டே போகிறது.

# வாரம் ஒரு ஆசனம் (02)

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)



## நின்று செய்யும் ஆசனங்கள்

**01. அர்த்த கடிச்சக்கராசனம்**

அர்த்த என்றால் பாதி, கடி என்றால் இடுப்பு, சக்கர என்பது சில்லு என்ற பொருள் கொண்டால் உடல் பக்க வாட்டாக வளைந்த நிலை என்ற பொருள்படும்.

**செய்முறை:**

1. உடல்ஒரேநேர்கோட்டில்இருக்குமாறு (தடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)

2. உள்மூச்சுடன் மெதுவாக வலது கையைப் பக்கவாட்டில் உயர்த்தி தலைக்கு மேல் கொண்டு வரவும். அடிக்கையானது வலது காதைத் தொட்டுக் கொண்டிருக்க வலது உள்ளங்கை இடப்புறம் நோக்கியதாக இருக்க வேண்டும்.

3. வெளிமூச்சுடன் இடுப்பை மெதுவாக இடப்புறம் வளைக்கவும். இடது உள்ளங்கை இடக்கால் தொடையைத் தொட்டவாறு இருக்க எவ்வளவு தூரம் கீழே போக முடியுமோ அவ்வளவு தூரம் கீழ் நோக்கி செல்லட்டும்.

4. தலையை சிறிது திருப்பி வலக்கை விரல்களின் மீது பார்வையை செலுத்தல் வேண்டும். வலக்காதின் துவாரத்தை வலக்கையின் அடிப்பகுதி மறைத்தவாறு இருக்க வேண்டும். இந்த நிலையில் நின்றவாறு சுவாசித்தல் வேண்டும். உச்ச நிலை

5. பின்னர் மூச்சை உள்ளிழுத்தவாறு மெதுவாக நேரான நிலைக்கு வரவும். அடிக்கையானது காதைத் தொட்டுக் கொண்டு மேல் நோக்கியிருக்க வேண்டும்.

6. மெதுவாக மூச்சை வெளிவிட்டவாறு வலக்கையை பக்கவாட்டுக்கு கீழே கொணர்ந்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு:** இதே முறையில் இடது பக்கத்துக்கும் செய்யவும். (மாற்றுப் பயிற்சி) ஒவ்வொரு பக்கமும் தலா மூன்று தடவைகள் செய்யவும்.

### பலன்கள்:

முதுகுத்தண்டுவடம் வளையும் தன்மை அதிகரிக்கிறது. இதனால் வீரியத் தன்மையும் வலிமையும் பெறுகின்றது. பக்க மார்புத் தசைகள், இருதய நாடி, நாளங்கள், நரம்புகள் நன்கு நீட்டப்பட்டு அழுத்தப்பட்டு குருதி ஓட்டம் அதிகரிக்கும். காதடைப்பு, கண் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. நுரையீரல்கள் பலப்பட்டு அதன் கொள்ளவும் அதிகரிக்கின்றது. இடுப்பு மூட்டுக்கள் வளையும் தன்மை பெறுவதால் வீரியத் தன்மை பெறுகின்றது. இடுப்பை சுற்றிய அதிகப்படியான கொழுப்புகள், ஊளைச்சதைகள் கரைக்கப்படுகின்றன. முதுகுவலி முள்ளந்தண்டுவலி உபாதைகளுக்கு நல்லது. மலச்சிக்கல் நீங்குகிறது. வயிற்றுப் பகுதியில் காணப்படும் உறுப்புக்களுக்கும் உரமூட்டுகின்றது.

தொடரும்....

# விஜய்யின் மாஸ்டர் சாதனை படமாக அமையும்

## - ஆண்ட்ரியா ஓபன் டாக்



இளம் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய நடித்த படம் மாஸ்டர். இப்படத்திற்கான வேலைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டது, ரிலீஸ் மட்டும் தான் உள்ளது.

அடுத்த வருட ஆரம்பத்திலேயே படம் ரிலீஸ் ஆகிவிடும்என்றுகூறுகின்றனர், கடைசியில் எப்போதும் ரிலீஸ் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

இப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்துள்ள நடிகை ஆன்ட்ரியா ஒரு பேட்டியில், மாஸ்டர் படத்தில் பணிபுரிந்தது மறக்க முடியாத அனுபவம், இப்படத்தில் விஜய்யுடன் பணிபுரிந்த பிறகு அவரது தீவிர ரசிகையாக மாறிவிட்டேன், அவ்வளவு நல்ல மனிதர்.

2021ம் ஆண்டில் அதிகம் சாதனை படைத்த படமாக மாஸ்டர் இருக்கும் என கூறியுள்ளார்.




# 14 வயதில் சாதனை செய்த பிரபலங்கள்

**ஷேக்ஸ்பியர்:**

தந்தை பல்வேறு கடன்கள் வாங்கி திருப்பி செலுத்ததால் சிறையில் தள்ளப்படுகிறார், தங்கை இறந்து போகிறார், பள்ளியை விட்டு நிறுத்தப்படுகிறார், சொந்த வீடும் பறி போகிறது. அந்த பதினான்கு வயது சிறுவன் அதை யெல்லாம் மறக்க தானே தனியாக முயற்சி செய்து தலைசிறந்தநூல்களைதேடித்தேடி படிக்கிறான். உலகின் தலைசிறந்த நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் தான் அந்த சிறுவன்.

**அப்துல் கலாம்:**

உலகப்போர் சமயம் அது, வீட்டில் வறுமை தாண்டவமாட தினமணி செய்தித்தாள்களை தொடர்வண்டியில்இருந்துவீசும்பொழுதுஅதைப் பெற்று ஊரெல்லாம் விநியோகம் செய்து வீட்டின் வறுமை போக்க உதவுகிறான் அந்த சுட்டிப்பையன் கூடவே செய்திகளை ஊரில் பலருக்கு படித்து காண்பிக்கவும் செய்கிறான். வருங்காலத்தில் செய்திதாள்களெல்லாம் கொண்டாடப்போகும் அந்த பொறுப்பான சிறுவன் அப்துல் கலாம்

**மலாலா:**

தாலிபான்கள் முதலிய தீவிரவாதிகளின் அச்சுறுத்தலால் பெண் குழந்தைகள் படிக்க முடியாமல் தடுக்கப்படும்அவலத்தைஉலகுக்கு தன் எழுத்தின் மூலம் எடுத்து சொன்னவரும் அவர்களின் கல்விக்காக் தொடர்ந்து போராடியவரும் ஆன மலாலாவுக்கு அவரின் பதினான்காம் வயதில் பாகிஸ்தானின் முதல் தேசிய இளைஞர் அமைதி விருது வழங்கப்பட்டது.

**சுவாமி விவேகானந்தர்:**

பதினான்கு வயதில் ராய்பூரை நோக்கி சொந்த ஊரான கல்கத்தாவில் இருந்து அப்பாவின் பணிமாறுதல் காரணமாக படிக்க போன நரேந்திரன்அங்கேநல்லபள்ளிகள் இல்லாததால் பள்ளிக்கு போகாமல் வீட்டில்இருந்தபொழுதுவிளையாடி பொழுது போக்காமல் அப்பாவுடன் பல்வேறுஆழமானதலைப்புகளில் அனுதினமும் பேசி பேசி அறிவை விரிவு செய்து கொண்டான். உலகமே சுவாமி விவேகானந்தர் என புகழும் மாமனிதரே அந்த சிறுவன்

**விஸ்வநாதன் ஆனந்த்:**

பதினான்கு வயதில் தேசிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டார் அந்த சிறுவன் யாருமே செய்யாதசாதனையாணஒன்பதிற்கு ஒன்பது என அனைத்து போட்டிகளிலும் வென்று தேசிய சாம்பியன் ஆனார். மின்னல் வேகத்தில் அவனின் மூவ்கள் இருந்தன. அந்த மின்னல் வேக ஆட்டக்காரர் உலக செஸ் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த்.

**பகத் சிங்:**

பதினான்கு வயதிற்கு முன்னமே விடுதலை போரில் பங்குகொள்ள ஆரம்பித்து இருந்த அந்த தைரியம் மிகுந்த சிறுவன் பல்வேறு அப்பாவி மக்கள் கொல்லபடுவதற்கு காரணமானகுருகிரந்த்தசாஹிப்துப்பாக்கி சூடுசம்பவத்தை கண்டித்து அமைதி வழியில் போராடிய குழுவினர் ஊர் ஊராக சென்று ஆதரவு திரட்டிய பொழுது தன் ஊரில் முன்னணியில் நின்று அவர்களை ஆங்கிலேயருக்கு அஞ்சாமல் பதினான்கு வயதில் வரவேற்றான். அந்த வீரச்சிறுவன் பகத் சிங்.

**பாப்லோ பிகாசோ:**

லோலா என்கிற தன் தங்கையை இழந்த சோகத்தில் முதல் கம்யூனியன் என்கிற அவள் நினைவாக ஒரு ஓவியத்தையும், ஆன்ட் பெப்பா என்கிறஇன்னொருஓவியத்தையும் அந்த பதினான்கு வயது சிறுவன் தீட்டினான். அகோரமாக இருக்கிறது, ஒன்றும் புரியவில்லை என ஏளனம்செய்தார்கள்பலர். ஆனால் அந்த ஆன்ட் பெப்பா ஸ்பெயினின் தலைசிறந்த ஓவியங்களில் ஒன்றாக பிற்காலத்தில் குறிக்கப்பட்டது. அந்த சிறுவன் தான் நவீன ஓவியங்களின் தந்தை என போற்றப்பட்ட பாப்லோ பிகாசோ.

**பில் கேட்ஸ்:**

எப்படி டைம் டேபிள் போடுவது என திணறிக்கொண்டுஇருந்தபள்ளிக்கு பதினான்கு வயதில் செயல்பாட்டு திட்டத்தை கச்சிதமாக ப்ரோக்ராமிங் மூலம் நண்பர் பால் ஆலனோடு இணைந்துவடிவமைத்துகொடுத்து பள்ளியில்நான்காயிரத்துஇருநூறு டாலர்வருமானம்பார்த்த அந்த சாகசக்கார பையன் பில் கேட்ஸ்.

**தாமஸ் அல்வா எடிசன்:**

படிக்க லாயக்கில்லை என பள்ளியை விட்டு ஐந்து வயதில் துரத்தப்பட்டு அம்மாவின் கவனிப்பில் மற்றும் கற்பிப்பில் வளர்ந்த அந்த சிறுவன் தன் பதினான்காம் வயதில் நாடு முழுக்க உள்நாட்டு போர் நடந்துகொண்டு இருந்த பொழுது சுடச்சுட செய்திகளை தானே முழுக்க முழுக்க தொடர் வண்டியிலேயே அச்சிட்டு அங்கேயே

தி வீக்லி ஹெரல்ட் என்கிற பெயரில் விற்றும் காண்பித்தான் அந்த புத்திசாலி சிறுவன். அந்த செய்திதாளில் கிசுகிசுக்களையும் இணைத்து வெளியிட்டு குறும்பு செய்தான் அவன். அவனின் பெயர் தாமஸ் அல்வா எடிசன்.

**சச்சின்:**

மும்பைகிரிக்கெட்சங்கம்வருடாவருடம் தேர்ந் தெடுக்கும் சிறந்த இளம் ஆட்டக்காரர் விருது கிடைக்காமல் சோர்ந்து போயிருந்த சச்சினுக்கு அவரின் பதினான்காம் வயதில் கவாஸ்கரிடம் இருந்து ஒரு கடிதம் வந்து இருந்தது. போன சீசனில் நீ நன்றாக விளை யாடினாய் விருதுகளை பற்றி கவலைப்படாதே, பிற வீரர்கள் சரியாக ஆடாத பொழுது நீ மட்டும் போராடியது எனக்கு பிடித்து இருந்தது. பின் குறிப்பு: விருது கிடைக்காததற்கு வருந்தாதே அந்த விருதை வாங்காத ஒரு இளைஞன் டெஸ்டில் குறிப்பிடத்தகுந்த சாதனைகள் புரிந்தான். (கவாஸ்கர் தன்னை குறிப்பிடுகிறார்) இக்கடிதமே தன்னை கவாஸ்கரை போல சாதிக்க தூண்டியது என்கிறார் சச்சின.




## செயலமர்வு!

அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவிலுள்ள உப அஞ்சல் அதிபர்களுக்கான செயலமர்வு ஒன்று அம்பாறை மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
அக்கரைப்பற்றுப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக சிரேஷ்ட இலிகிதர் ஏ.சீ.நளீர் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஆர்.எம்.ஹேமந்த ஆரம்பித்து வைத்தார்.
அஞ்சல் துறையின் புதிய சேவைகள் பற்றி வாடிக்கையாளர்களை விழிப்பூட்டல், 2021ஆம் ஆண்டுக்கான அஞ்சல் வியாபார இலக்கை அடைதல் எனும் தலைப்புகளில் செயமலர்வின்போது வளவாளர்கள் உரையாற்றினர்.

**“அஞ்சல் சேவை முக்கியத்துவம் மிக்கது.”**

## மீண்டும் இடைநிறுத்தம்!

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தொடங்கிய ஆரம்ப கட்டத்தில் இடைநிறுத்தப்பட்டு, பின்னர் செயற்படத் தொடங்கிய மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகள் தற்சமயம் அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டு, மக்களின் பிணக்குகளை மத்தியஸ்தர் மூலம் சுமூகமாகத் தீர்த்து வைப்பதில் பெரும் பங்காற்றி வரும் மத்தியஸ்த சபைகள், கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான அச்சுறுத்தல் நீங்கி, பூரண கட்டுப்பாடு ஏற்பட்ட பின்னரே மீண்டும் இயங்கத் தொடங்குமெனத் தெரிய வருகின்றது.

**“மத்தியஸ்தம் பிணக்கிற்குத் தீர்வு”**

■ அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....





## மற்றொரு முகம்!

முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலை வருமான ரிஷாட் பதியுதீனைக் கைது செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் இனவாதத்தின் மற்றுமொரு வெட்டுமுகமாகும்”
இவ்வாறு நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
‘எமது தலைவர் ரிஷாட்டின் அரசியல் வளர்ச்சியைப் பொறுக்கமாட்டா புல்லுருவிகள் கைது தொடர்பில் புளகாங்கிதம் கொள்ளலாம். ஆனால் முஸ்லிம் மக்கள் ரிஷாட்டின் பக்கமே அணி திரண்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“தென் கிழக்கில் கொதிநிலை”**



## பலத்த காற்று!

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் கடந்த ஒரு வார காலமாக பகல் வேளைக்ளில் பலத்த காற்று வீசி வருகின்றது.
குறிப்பாக அனலுடன் கூடியதாக இக்காற்று வீசுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதுடன் வெளியில் நடமாடுவதையும் குறைத்துக் கொண்டுள்ளனர்.
வீதிகளில் நிறுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள், மரங்கள் முறிந்து விழும் சம்பவங்களும் இக்காற்றினால் இடம்பெற்று வரும் அதேவேளை கடற்றொழிலுக்குச் செல்ல முடியாதும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**“காலநிலை மாற்றம் இது.”**



## ஒன்றிணைவோம்!

தமிழ் மக்களின் நலன்கருதி வடக்கில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்துள்ளமை போன்று கிழக்கிலும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கட்சிபேதங்களுக்கப்பால் மக்கள் பிரச்சினைகளில் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.
இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் அறைகூவல் விடுத்துள்ளார். மட்டக்களப்பிலுள்ள பத்மநாபா மன்ற அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பொன்றின் போது அவர் இதனை வலியுறுத்தினார்.
கிழக்கில் உக்கிரமடைந்துள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் உட்பட தமிழ் மக்களுக்கெதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள பேரினவாத செயற்பாடுகளை முறியடிக்க இந்த ஒன்றிணைவு அவசியம் எனவும் துரைரெத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

**“ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு”**

## கண்டனம், கண்டனம்!

முல்லைத்தீவு , முறிப்புப் பிரதேசத்தில் சட்டவிரோத காடழிப்புத் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற இரு ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தென்கிழக்கு இலங்கை செய்தியாளர் சங்கம் பலத்த கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.
சங்கத்தின் சிரேஷ்ட செய்லாளர் எஸ்.பேரின்பராசா இச் சம்பவம் தொடர்பிலான கண்டன அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.
“முல்லைத்தீவைச் சேர்ந்த ஊடகவியலாளர்களான க.குமணன், ச.தவசீலன் ஆகியோர் மீது தாக்குதல் மேற்கொண்ட சமூக விரோத செயற்பாட்டு கும்பல் மீது நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அரங்கேறும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறை, வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவும் வேண்டும்” - என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஊடகம்”**




## நிந்தவூரில்!

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுளளன. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா பஷீர் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர், தொண்டர்கள் இணைந்து இது தொடர்பான கள நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

**“உயிர் கொல்லி டெங்கைக் கட்டுப்படுத்து**

## ஜோதிடம்

கணினி ஜாதகம்,திருக்கணித வாக்கியம் முறையில் தமிழில் கணித்துப் பெறவும்.ஜோதிட அறிவுரைகளுக்கும்
Jothi Eshwar.
Whatsapp:077 943 8284

## வீடு வாடகைக்குண்டு

கொடிகாமம் மாக்கற் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
076 333 3291

## வேலையாள்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கும் நிறுவனத்திற்கு **மரவள்ளி, தட்டுவடை, முறுக்கு** மற்றும் **இனிப்பு வகைகள்** செய்வதற்கு வேலையாள்கள் தேவை.(அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது)
074 053 1982,076 841 2883

## மணிக்கூடுகள் விலைக்கு வாங்கப்படும்

பழையகால மணிக்கூடுகள்
Swisszreland, Rolex, Omega, Pataph, Philiph பழுதடைந்தவைகளும் விலைக்கு வாங்கப்படும்.
076 697 7346

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் - 2021

சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, சாளம்பைக்குளம் மீன் கடை, நெளுக்குளம் மீன்கடை நெளுக்குளம் கோழியிறைச் சிக்கடை, நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, தோணிக்கல் மீன் சந்தை

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் மீன் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி -19.10.2020 முதல் 02.11.2020 பிற்பகல் 12.30 மணி வரையான அலுவலக நேரம்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி – 02.11.2020 பிற்பகல் 12.30 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 02.11.2020 பிற்பகல் 2.30மணி


**நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகிய வற்றில் றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா."** என்ற முகவரிக்கு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா."** என்ற முகவரிக்கு 02.11.2020 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
- கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக்கோரிக்கையை நிராகரிக்கவும் எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.
- கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூக மளிக்கலாம்.
- கேள்விப்பத்திரங்களை கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக் கக்கூடிய கேள்விவைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- கேள்வித்தொகையிலும் குறைந்தகேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக் கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
- உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
- சந்தைச்சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன். இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1 / 3 பகுதியைச் 2020.11.10 ஆம் திகதிக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- நெளுக்குளம் மீன்கடை, மாட்டிறைச்சிக்கடை, கோழிக்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 2000.00 வாடகையாகவும் சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, சாளம்பைக்குளம் மீன் கடைகளுக்கு தோணிக்கல் மீன் சந்தைக்கு மாதாந்தம் 1500.00 வாடகையாகவும் செலுத்தப் படல் வேண்டும்.
- குத்தகைக்கு எடுப்பவர்கள் விற்பனையாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் மீன் மற்றும் கோழி கிலோ ஒன்றிற்கு ரூபா 8.00 அறவிடலாம்.
- தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசாங்கத்தால் அவ்வவ்போது அறவிடப்படும் வரி என்பனவற்றை செலுத்துதல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை விபரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| சாளம்பைக்குளம் மீன் கடை | 223,850.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 494,527.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 640,937.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 900,239.86 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை | 602,943.00 | 25,000.00 | 1,000.00 |
| தோணிக்கல் மீன்சந்தை | 27,738.04 | 25,000.00 | 1,000.00 |

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**நேரியகுளம் வீதி, நெளுக்குளம் வவுனியா.**
**18.10.2020**

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்துக்களும்





எமது பாடசாலையில் சேவையாற்றி **அகவை அறுபதை** நிறைவு செய்து **18.10.2020**
**இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும்**
**ஆரம்பக்கல்வி ஆசிரியர்**
திருமதி **தனலட்சுமி யோகராஜா**
**(SLTS - I)**

**சேவைக்காலம் :**
- 22.03.1990 - 16.02.2010
  யா/ உசன் இராமநாதன் ம.வி
- 17.02.2010 - 31.12.2018
  யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்
- 02.01.2019 - 18.10.2020
  யா/ செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை

மணிவிழா நாளில் மாண்புடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா/செட்டித்தெரு**
**மெ.மி.த.க பாடசாலை யாழ்ப்பாணம்.**



# உங்களது வாழ்க்கையின் மாற்றத்திற்கான உந்து சக்தியாக இருக்க நீங்கள் தயாரா?

நாங்கள் இலங்கையின் முன்னணி தனியார் வணிக வங்கியான HNB PLC உடன் இணைந்துள்ளமை நீங்கள் அறிந்த விடயமாகும். நாங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலான உன்னதமான சாதனையுடன் நிதித் துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக இருக்கிறோம். இலங்கை முழுவதும் 48 கிளைகள் மற்றும் 21 சேவை நிலையங்களின் ஒருங்கிணைந்த வலையமைப்பு மூலம் பல துறைகளுக்கு சேவை செய்யும் பல்வகைப்பட்ட நிதிச் சேவைகளையும் வழங்கி வருகின்றோம். இலங்கை மற்றும் ஆசியாவில் பணியாற்றுவதற்கான சிறந்த இடமாக நாங்கள் விருது பெற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

எங்கள் கிளைச் செயல்பாடுகளுக்கு திறமையான நிறைவேற்று உத்தியோகத்தர் / சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் – (குத்தகை) வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**நிறைவேற்று உத்தியோகத்தர் / சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் -குத்தகை (இலங்கை முழுவதும்)**

**அடிப்படைத் தகுதிகள்**

- குறைந்தது குத்தகைத் துறையில் 2 அல்லது 3 வருட அனுபவம்.
- சிறந்த உள்ளக வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் வலையமைப்பு திறன் அத்துடன் வாடிக்கையாளரை கையாளும் திறன்.
- கடன் மதிப்பீடு மற்றும் ஆவணங்கள் பற்றிய சிறந்த அறிவு.
- வினைத்திறன் மிக்க சமூக உறவு மற்றும் பேச்சித் திறன் பகுப்பாய்வு மற்றும் விற்பனைத் திறன்.
- தமிழ் மற்றும் ஆங்கிலம் / சிங்களம் - மொழிகளில் சிறந்த தகவல் தொடர்புத் திறன்

**தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சிமிகு கொடுப்பனவு வழங்கப்படும் மற்றும் பிற கொடுப்பனவுகளும் உங்கள் ஆற்றலுக்கு ஏற்ப வழங்கப்படும்.**

உங்கள் தகைமைகள் எங்களை திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும் என்று நீங்கள் நம்பினால், எங்கள் சக்தி வாய்ந்த அணியில் இணைவதற்கு எதிர்பார்க்கின்றிர்கள் என்றால், இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் hr@hnbfinanace.lk எனும் எங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பதிவுத் தபால் மூலம் உங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்க முடியும். குறிப்பாக உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்களையும் குறிப்பிட்டல் வேண்டும் உங்கள் விண்ணப்பத்தை தபால் மூலம் அனுப்புவீரகளாயின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

சிரேஷ்ட முகாமையாளர் - மனிதவளம்
HNB Finance PLC
No.168, நாவல வீதி, நுகேகொட, இலங்கை.
Tel: 011 202 48 48/ 0113 188 487
Email: hr@hnbfinance.lk

HNB | FINANCE

Best Workplaces
Great Place To Work
LKA 2020

# நாங்கள் மாபியாக்கள் அல்லர் வாழ்வதற்கு வழிவிடுங்கள்!

## வாடகைக் கார் உரிமையாளர்கள் கோரிக்கை

வவுனியா, ஒக்.18


**வாடகைக் கார் உரிமையாளர்கள் மாபியாக்கள் அல்லர், நாமும் வாழ பொது அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் உதவ வேண்டும்! என்று வாடகைக் கார் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா நகரசபை அமர்வில் நடைபெற்ற வாடகைக் கார் ஓட்டு நர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான மீள் பரிசீலனையில் எமக்கான அனுமதி மீள வழங்கப் பட்டுள்ளது. இதன்போது வவுனியா நகரசபை உறுப்பினர்கள் பலரும் அனுமதி வழங்கிய நிலையில், நக ரசபை உறுப்பினர் காண்டீபன் இந்தச் சேவை வவுனியாவுக்குத் தேவையாக இருந்தாலும், இந்தச் சேவை கொலையில் சென்று முடி வடையும் எனத் தெரிவித்திருந்தார். அந்த மிரட்டலான கருத்தைய டுத்து சபை மதவுவைத்தகுளம், பொருளாதார மத்திய நிலையம் முன்பாக அனுமதி வழங்க வேண் டும் என முச்சக்கர வண்டிச் சங்கத் தலைவர் தெரிவித்தார் என்று நகர சபைத் தவிசாளர் தெரிவித்திருந் தார்.

பொருளாதார மத்திய நிலையம் முன்பாக காய்கறிகளை ஏற்ற வாட கைக் கார் தேவையில்லை. மருத்துவமனைக்கு வருபவர்க ளுக்குத் தான் வாடகைக் கார் தேவை. ஜனாதிபதியின் தற்போ தைய திட்டத்தின் கீழ் நாட்டின் அபி விருத்தியை மையமாகக் கொண்டு நான்கு சக்கர வண்டிகளுக்கு மட் டும் அனுமதி வழங்கப்பட்டு வரும் நிலையில் எமக்கு மட்டும் அனுமதி வழங்கக்கூடாது என்று முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

வாடகைக் கார் ஓட்டுநர்களான நாம் வசதியானவர் அல்லர். நாம் மாபியாக்கள் அல்லர். நாமும் லீசிங்கில் வாகனத்தைப் பெற்று கிராமத்தில் இருந்து வந்திருக்கின் றோம். நாமும் வவுனியாவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதன் மூலம் வரும் வருமானமே எமது குடும்ப வாழ்வாதாரத்தைப் போக்கும். நாமும் லீசிங் கட்ட முடி யாமல் தான் இருக்கின்றோம். இதனை எமது சகோதர முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் உணர வேண்டும் - என்றனர். (ஐ-18)



## யாழ்ப்பாண நகரப் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.18

லயன்ஸ் கழகத்தினருடன் யாழ்ப்பாணப் பொலிஸார் இணைந்து கொரோனா விழிப்புணர்வுச் செயற் பாட்டை முன்னெடுத்தனர்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்றுக் காரணமாக பொதுமக்களுக்கு கொரோனா தொடர் பாக விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் யாழ் நகர் சிற்றி லயன்ஸ் கழகமும், யாழ்ப்பாண பொலிஸாரும் இணைந்து யாழ். மத் திய பஸ் நிலையத்தில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாட்டை மேற்கொண்டனர்.

விழிப்புணர்வின்போது முகக்கவசம் அணியாது யாழ் நகருக்குள் வருகை தந்த பொதுமக்களுக்கு முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.

மேலும் சமூக இடைவெளி பேணுதல், சுகாதார நடை முறைகளைப் பின்பற்றுதல் தொடர்பில் யாழ்ப் பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிர சாத் பெர்னாண்டோ மற்றும் சிற்றி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட னர். (ஐ-111)

## உர மானியம் வழங்கல்

சாவகச்சேரி,ஒக். 18

தென்மராட்சி தெற்கு, கைதடி, நாவற் குழி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான மானிய உரவ கைகள் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள் ளன.

அமைப்பின் உறுப்பினர்கள் இந்த வருடத்துக்கான சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு,ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் டோக்கன் ஆகிய வற்றைக் கொண்டுவருமாறு அமைப் பின் தலைவர் ஐ.சத்தியசீலன் அறி வித்துள்ளார். (ஐ- 9)

* * *

முல்லைத்தீவு, ஒக்.18

முத்துஐயன்கட்டு குள, நீர்ப்பாசனத் தின் கீழ் விவசாயத்தில் ஈடுபடும் விவ சாயிகள் உள்ளிட்ட காலபோக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பதி னேழு கமக்கார அமைப்பால் விவசா யிகளுக்கு காலபோக பயிர்ச்செய் கைக்குரிய இலவச உரமானியத்தின் முதலாம் கட்டம் வழங்கும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட் டது. (ஐ-ரி1)

## வாடகைக் கார் ஓடுவதற்கும் வவுனியா நகரசபை அனுமதி

### இடம் ஒதுக்கீடு செய்ய விசேட குழு

வவுனியா, ஒக்.18

வவுனியாவில் வாடகைக் கார் ஓடுவதற்கு நகரசபை அமர்வில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், வாடகைக் கார்களைத் தரிப் பதற்கு இடம் ஒதுக்கீடு செய்ய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் வாடகைக் கார் ஒட்டுவதற்கு வவுனியா மருத்து வமனை முன்பாக ஏற்கனவே நகரசபையால் அனுமதி வழங் கப்பட்ட நிலையில், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அனுமதி இடைநிறுத்தப்பட்டிருந்தது. வவுனியா நகரசபை அமர்வில் குறித்த விடயம் கலந்து ரையா டப்பட்டதுடன், முச்சக்சக்கர வண்டிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வாடகைக் கார் சபை அமர்வில் உறுப்பினர்களால் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி இரு பகுதியினரதும் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் செயற்பட வேண்டும் என நகரசபை உறுப்பினர்கள் தீர்மானித்ததுடன், வாடகைக்கார் ஒட்டுநர்களுக்கு இடம் வழங் குவது தொடர்பில் நான்கு பேர் கொண்ட குழு அமைக்கப்பட் டுள்ளது எனவும், அதன் அடிப்படையில் அவர்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

## மதுப்பாவனைக்கு எதிராக சுவரொட்டிப் போராட்டம்

கொழும்பு,ஒக்.18

மதுப் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நல்லூர் பிரதேச சபை யால், விழிப்புணர்வு மற் றும் சுவரொட்டிப் போராட் டங்கள் நடத்தப்படவுள் ளன.

சபையின் மாதாந்த அமர்வில் இது தொடர் பான தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறை மற் றும் சமூகச் சீர்கேடுகள் என்பன தற்போது தலை தூக்கியுள்ளன. இவற் றுக்கு மதுபாவனையே முக்கிய காரணம்.

இவற்றுக்கு எதிராக சபையால் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

சபைக்கு உட்பட்ட பகுதி யில் மதுபாவனைக்கு எதிரான விழிப்புணர்வு சுவரொட்டிப் போராட்டங் கள் உட்பட மற்றும் பல வேலைத் திட்டங்களை மேற்கொள்ள நடவ டிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (சு-17)

## வாழ்வாதார உதவி

விபத்தில் உடல்நிலை பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவருக்கு வாழ்வாதார உதவியாக 20 ஆயிரம் ரூபா பெறு மதியான கோழிக்குஞ்சுகள் வழங்கப் பட்டன.

சுசிலன் பவுண்டேசன் நிறுவனத்தால் வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் வசிக்கின்ற அ.காளிமுத்து என்பவ ருக்கே இந்த உதவி வழங்கப்பட் டது. (ஐ-222)



கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்தை மக்களின் பங்களிப்புடன் சீரமைப்பது தொடர்பான கலந்துரை யாடல் பிரமந்தனாறு பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளர் தலைமை யில் நடைபெற்றது. இதன்போது திட்டம் செயல்படுத் தப்படும் முறை மற்றும் இதற்கு சமூக மட்ட அமைப் புகளின் பங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ஐ-222)

## வவுனியா தனிமைப்படுத்தல் மையத்துக்கு 91 பேர் வருகை

வவுனியா,ஒக்.18

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத் தல் நிலையத்துக்கு கொரோனாத் தொற்று சந்தேகநபர்கள் அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தேசிய கல்வியற் கல்லூரி கொவிட்-19 தனிமைப் படுத்தல் நிலையமாக அண்மை யில் மாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் கம்பஹா மாவட் டத்தில் கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்கள் என 91 பேர் இவ் வாறு நேற்றுமுன்தினம் இரவு அழைத்துவரப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் இராணு வப் பாதுகாப்புடன் 3 பஸ்களில் அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்கள் 14 நாள்கள் தனி மைப்படுத்தப்படவுள்ளனர். (ஐ-110)

# அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தீரும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

**கொடிகாமம், ஒக்.18**

**பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சின் அழைப்பின் பேரில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்;

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கமானது அதிபர் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கலந்துரையாடலில் பங்கேற்றது. நீண்டகாலம் தொடரும் வேதன ஒழுங்கீனம் சம்பந்தமாக அவ்வப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் 2019 ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி எடுக்கப்பட்ட



அமைச்சர் குழுவின் தீர்மானமும் ஆராயப்பட்டது. சம்பள ஆணைக் குழுவின் தீர்மானம் எதுவாயினும் சம்பளப் பிரச்சினையைச் சரிசெய்வதன் தேவைப்பாடு குறித்து ஆசிரியர் சேவைச் சங்கத்தால் வலியுறுத்தப்பட்டது. இதன்போதே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அடுத்த பாதீட்டுக்காக தற்போது அமைச்சு ஒழுங்கமைத்துள்ள வேதனப் பிரமாணப் படிமுறையின்படி பாதீட்டில் யோசனைகள் முன்மொழியப்படும் அதற்காக இந்தக் கலந்துரையாடலின் அறிக்கை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் கரங்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேலும் தெரிவித்தார். (ஐ-159)

# நீராவிப்பிட்டி வாராந்த சந்தை தற்காலிகமாக அதே இடத்தில்

முல்லைத்தீவு, ஒக்.18

நீராவிப்பிட்டி வாராந்த சந்தையை தற்காலிகமாக அதே இடத்திலேயே நடத்த கரைதுறைப்பற்று பிரதேச சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பகுதியில் இயங்கிவந்த நீராவிப்பிட்டி வாராந்த சந்தையை இடம்மாற்ற எடுத்த நடவடிக்கையால் வர்த்தகர்களுக்கும், பிரதேச சபையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் க.தவராசா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நீராவிப்பிட்டி வாராந்த சந்தையை அதே இடத்திலேயே தற்காலிகமாக இயக்க சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஐ-19)



யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு சுசிலன் பவுண்டேசன் நிறுவனத்தினரால் சைக்கிள் வழங்கப்பட்டது. (ஐ-222)

# விபத்துக்களில் நால்வர் காயம்

சாவகச்சேரி, ஒக்.18

தென்மராட்சி பகுதியில் இடம்பெற்ற பல்வேறு விபத்துகளில் நால்வர் காயமடைந்தனர்.

டிப்பர் வாகனத்துடன் சைக்கிள் மோதியதில், சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து சாவகச்சேரி பெருங்குளம் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த 34 வயதுடைய குடும்பத் தலைவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கொடிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்தனர். இதில் பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்த வயது 48 வயதுடைய ஒருவரும், கச்சாய் தெற்கைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவருமே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சாவகச்சேரி தனங்களப்பு பகுதியில் நேற்றுமுன்தினம் காரும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் 75 வயதான முதியவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-9,159)

# வெளி மாவட்டத்தவர்களை கண்காணிக்க குழுக்கள்

மன்னார், ஒக்.18



மன்னாரில் பெரிய வேலைத்திட்டங்களில் கடமைபுரியும் வெளி மாவட்டத்தவர்களை கண்காணிக்கக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

மன்னார் மாவட்டத்தில் தற்போது காற்றாலை மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற பெரிய அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இவ் வேலைத் திட்டங்களில் வெளி மாவட்டத்தவர்களே அதிகமானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தங்கள் பகுதிகளுக்குச் சென்று திரும்பும் வேளையில் தனிமைப்படுத்தப்பட்ட பின்பே வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும். இவர்களைக் கண்காணிக்க குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இன்றைய நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு தொழில் நிமித்தம் வருகை தந்திருப்பவர்களால் கொரோனா அச்சநிலை உருவாகியுள்ளது.

விடுமுறைக்காக தங்கள் ஊர்களுக்குச் சென்று மீண்டும் திரும்பும்போது இரு வாரங்களுக்கு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் பி.சி.ஆர். பரிசோதனைக்குப் பின்பே மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப் பகுதியில் வேலை செய்பவர்களை கண்காணிப்பதற்கென பிரதேச செயலாளர்கள் தலைமையில் இராணுவம், பொலிஸ், சுகாதார சேவைகள் மருத்துவ அதிகாரி மற்றும் பிரதேச செயலாளர் கொண்ட ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழு வாரம் ஒருமுறை வேலைத்தளங்களுக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-60)

# மழை இன்மையால் பயிர்கள் வாடும் நிலை

வலி.மேற்கு, ஒக்.18

உரிய காலத்தில் மழை பெய்யாததால் வலி. தென் மேற்கில் விதைப்பு செய்யப்பட்ட பயிர்கள் தண்ணீர் இன்றி வாடும் நிலையில் உள்ளன.

பெரும்போக மழையை நம்பி விதைப்பு செய்த விவசாயிகள் இதனால் ஏமாற்றம் அடைந்துள்ளனர். சில விவசாயிகள் நீர்ப்பம்பி மூலம் பெருஞ் செலவில் இறைப்பு செய்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

நவாலி நங்கன் குளம், ஈச்சம்பிட்டி, உலகிவயல் ஆகிய பிரதேசங்களில் உள்ள வயல்களில் வெப்பம் காரணமாக நெற்பயிர்கள் கருகி வருகின்றன எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஐ-50)

# டெங்குப் பரிசோதனை; 29 பேருக்கு எச்சரிக்கை

கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் நடத்தப்பட்ட டெங்கு பரிசோதனையில் 29 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. டெங்கு பெருகும் சூழல் காணப்பட்ட 231 இடங்கள் இதன்போது துப்புரவு செய்யப்பட்டன. (ஐ-9)

# நகர அபிவிருத்திக்குள் யாழில் 15 பிரதேச பிரிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவுகள் நகர அபிவிருத்தி பிரதேசங்களாக விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுமான நெடுந்தீவு, தீவகம் தெற்கு, தீவகம் வடக்கு, காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர், வலி.தென்மேற்கு, வலி. மேற்கு, வலி.தெற்கு, வலி.வடக்கு, வலி. கிழக்கு, தென்மராட்சி, வடமராட்சி தென் மேற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட 15 பிரதேச செயலாளர் பிரிவுகளும் யாழ்ப்பாண நகர அபிவிருத்தி பிரதேசமாக உள்வாங்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களிலும் இத் திட்டத்தை முன்நகர்த்த உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர், செயலாளர், திட்டமிடல் அலுவலர், தொழில்நுட்ப அலுவலர்களை உள்ளடக்கிய திட்டக்குழு அமைக்கப்படவுள்ளது. (ஐ-50)

## பணியாளர் + வாகனம் தேவை

எமது நிறுவனத்தில் பணிபுரிய விற்பனை முகவர்கள் தேவை. அடிப்படைச் சம்பளம் மாதாந்தம் ரூபா 15000 மற்றும் கமிஷனும் பெறலாம். பட்டா ரக வாகனம் சாரதியுடன் தேவை. வாகனத்திற்கும் சாரதிக்கும் வேதனம் வழங்கப்படும்.

**P.G.S.Home பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.**
**077 904 1258, 021 314 9797**

## 10 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

18.10.2020



சிவராஜகுமார் மதிவதனி
தம்பதியரின்
செல்வப் புதல்வர்கள்
**சிவடனுஷன்**
**சிவடனுஷிகன்,**
அவர்கள்

தமது 10 ஆவது பிறந்தநாளை இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை தமது இல்லத்தில் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா மற்றும் பெரியப்பா, பெரியம்மா, பெரியத்தை, அத்தைமாமா, வசந்தா அத்தை, கனடா பெரியப்பா, கனடா பெரியண்ணா, சின்னண்ணா, அக்கா, பிறேமா அத்தை, மேனகா அத்தை, தண்ணிமாமா, சித்தா, குட்டி அத்தை, குட்டிமாமா ஆகியோர் பல்கலையும் கற்று சகல செல்வங்களுடனும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

"சிவபதி"
14/1, விதானை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**குட்டி மாமா குடும்பம்**

## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA**

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்


**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346
Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 08 . 1932 | 18 . 09 . 2020 |

அமரர்
**விஸ்வலிங்கம் பத்மநாதன்**
(இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள பொறியியலாளர்)

யாழ்ப்பாணம் உரும்பிராயை பிறப்பிடமாக கொண்டவரும் முத்திரைச்சந்தி, முருகேசர் லேன், நல்லூரை வசிப்பிடமாக கொண்டவருமான அமரர் விஸ்வலிங்கம் பத்மநாதன் அவர்கள் 18.09.2020 அன்று லண்டனில் காலமானார். அன்னார் விஸ்வலிங்கம் - நேசமணி ஆகியோரின் மகனாரும் காலஞ்சென்ற P.W.D.Overseer அரியரத்தினம் - செல்லம்மா ஆகியோரின் மருமகனும், நல்லூரை சேர்ந்த காந்தபூபதியின் அன்புக் கணவரும் ஸ்ரீகமலன் (கனடா), கார்த்திகா (லண்டன்), ஸ்ரீரெங்கர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விவேகரஜனி, சுகல்ஜன், சுபத்ரா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவாக இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை சுழிபுரம் "சிவபூமி முதியோர் இல்லத்தில்" நடைபெறும்.

பிள்ளைகள்:
ஸ்ரீகமலன்,கார்த்திகா,ஸ்ரீரெங்கர்

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
► முடிகொட்டுகிறதா? ► இளநரையா? ► தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ► புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
► பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## கட்டட நிர்மாணத்துறை பணியாட்களுக்கான வெற்றிடம்

புதிய கட்டட வேலை ஸ்தலங்களில் கீழ்குறிப்பிடப்படும் பணிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன. நீண்டகால தொழில் வாய்ப்புடன் தங்குமிட வசதியும் வார நடுப்பகுதியில் முற்பணமும் வார இறுதியில் ஊதியமும், மாத இறுதியிலும் மற்றும் வருட இறுதியிலும் சேவைக்காலத்திற்கான போனஸ் (Bonus) பணமும் வழங்கப்படும்.

நேரில் வரவும்
01. மேசன் உதவியாட்கள் (Labours)
02. மேசன் தொழிலாளர்கள் (Masons)
03. தச்சுத்தொழிலாளர்கள்(Carpenters - Shutering & Roof Work)
04. கம்பி (வலுவூட்டி) வளைப்பவர்கள் (Barbenders)
05. ஒட்டுனர்கள் (Welders)
06. மாபிள் பதிப்பவர்கள் (Tile Workers)

வேலைகளுக்கான உபஒப்பந்தங்களும் (Sup contract) வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி பிறைவட் லிமிட்**
பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா.

## USA GREEN CARD LOTTERY 2022

Live & Work in USA
Register before 10th November 2020
flex Institute
Call for Registration
0777 761 346
6A, Parakumba Place, Colombo 06.
www.flexinstitute.lk

## வேலையாட்கள் தேவை

சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

- **முகாமையாளர், மேற்பார்வையாளர்**
  வயது 30- 50
  அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
- **விற்பனை உதவியாளர்**
  இருபாலாரும், வயது 22- 40
  சாதாரண தரம் சித்தியுடன்,
  யாழ்நகரை அண்மித்தவர்கள்.

நேர்முகத்தேர்வு:- 19.10.2020 - 23.10.2020
மு.ப 9.30 - 4.00

**T.P No: 077 477 3481**
**No.175, K.K.S Road, யாழ்ப்பாணம்.**

## துயர் பகிர்கின்றோம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 . 12 . 1973 | 17 . 10 . 2020 |

யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியர்
**செல்வரட்ணம் ஜெயசீலன்**

எமது வித்தியாலயத்தில் ஐந்து ஆண்டுகள் ஆசானாய் அளப்பரிய சேவை செய்து அவனிவிட்டு ஆண்டவனடி சேர்ந்த துயரத்தில் உருகி அழும் உறவுகளுடன் எம் துயர் பகிர்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் - மீசாலை.

# பரீட்சையில் மோசடி: மேற்பார்வையாளர் கைது



கொழும்பு, ஒக். 18

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் போது மாணவி ஒருவருக்கு விடை எழுத உதவி செய்து பரீட்சை மோசடிக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுவா பகுதியில் உள்ள பாடசாலை பரீட்சை மண்டபத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜிதவுக்கு தகவல் வழங்கிய பின்னரே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-இ)

சட்டவிரோத மணல் அகழ்வு

# மண்மேடு வீழ்ந்து ஒருவர் இறந்தார்

கொழும்பு, ஒக். 18

சட்டவிரோதமாக அகழ்வில் ஈடுப்பட்டனர் என்று கூறப்படும் இருவர் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து கஹவத்தை,நீலகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பெல்மடுல்லை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-இ)

# திறப்பு நிகழ்வு

கொடிகாமம் ,ஒக்.18

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் மைதான நுழைவாயில் மற்றும் அமரர்கள் நடராஜா தங்கேஸ்வரி ஞாபகார்த்த ஞா.பா.ச. சிறுவர் விளையாட்டு முற்றம் ஆகியவற்றின் திறப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.


நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த் தன், அமரர்களான நடராஜா தங்கேஸ்வரி குடும்பத்தினர் சார்பாக சுகர்ணன், கவிதா தம்பதியினர், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளருமான எஸ்.சுந்தரம் டிவகலா, யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், ஜே/259 கல்வியங்காடு கிராம அலுவலர் எஸ்.தயாபரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், கிராம மக்கள் உள்ளிட்டபலரும் கலந்து கொண்டனர்

மைதான நுழைவாயில் மற்றும் ஞா.பா.ச.சிறுவர் விளையாட்டு முற்றம் ஆகியவை விருந்தினர்களால் திறக்கப்பட்டன. (ஐ-)



## மரண அறிவித்தல்

பிறப்பு
.
24
.
12
.
1973



இறப்பு
.
17
.
10
.
2020

### செல்வரட்ணம் ஜெயசீலன்

**(ஆசிரியர்-அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்)**

பூநகரியைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் ஜெயசீலன் நேற்று (17.10.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணம் தவமணி ஆகியோரின் மகனும், மீசாலை கிழக்கு அருணாசலம் கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், குமுதினியின் அன்புக் கணவரும், ஜெயந்தனா, ஜெர்ாந்தனா, ஜெயங்கரன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வகுமார், செல்வராஜேஸ்வரன், காலஞ்சென்ற கருணாகரன், தயாளினி, அனுசாதேவி, காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் கவிதாதேவி ஆகியோரின் சகோதரனும், துஸ்யந்தி, துஸ்யந்தன், காலஞ்சென்ற நிரஞ்சன் மற்றும் செந்தூரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிற்றம்பலம் வீதி,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பொலன்னறுவையில் முடங்கியது சிகிச்சைப்பிரிவு

கொழும்பு, ஒக். 18

கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டமையை அடுத்து பொலன்னறுவ மருத்துவமனையின் 22 ஆம் இலக்க சிகிச்சை விடுதி முடக்கப்பட்டுள்ளது.

அவசர தேவைகளைத் தவிர மருத்துவனைக்கு வரும் நோயாளிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனை தாதியர்கள் 42 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராசா செல்வநாயகி

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறையைச் சேர்ந்த திருமதி செல்வராசா செல்வநாயகி நேற்று (17.10.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும், மற்றும் தங்கலிங்கம், அருந்தவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, சானகி அம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகராசா, தவராசா, தேவதாஸ், தர்மராஜா, இன்பராஜா, நவநீதம், சுகுணா, ரகுணா, மோகனா, வதனா, ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி, ஜெயராணி, சுமித்ரா, கீதா, செல்வி, ஆனந்தசோதி, கேசவமூர்த்தி, சந்திரலிங்கம், விஜயரஞ்சன், பார்த்தீபன், ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை மயிலிட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு மயிலிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள் (யோகராசா, சுகுணா, ரகுணா)**

## மரண அறிவித்தல்

### திருமதி தேவநாயகம் ஜோசபின்

**பிறப்பு:**
**30.04.1946**

**இறப்பு:**
**17.10.2020**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், D8, உருத்திரபுரத்தை (கிளிநொச்சி) வதிவிடமாகவும், தற்போது 04A, அச்சுக்கூடவீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவநாயகம் ஜோசபின் (தவம்) நேற்று (17.10.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை மேரிதிரேசா தம்பதியரின் அன்பு புதல்வியும், சவரிமுத்து போல் சிசிலியா போல் தம்பதியரின் அன்பு மருமகளும், போல் தேவநாயகத்தின் (ஓய்வுநிலை பொறியியலாளர், கல்வித் திணைக்களம்) அன்பு மனைவியும், பிரான்சிஸ் சந்திரா, இம்மானுவேல் ஆனந்தம் (UK), எமிலியானுஸ்பிள்ளை, மேரி பூமணி, பெனிக்னாநவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபத்திரா (சுபா UK), அருண்ஜோசப் (UK), ஹேமன் ராஜ் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜித்தா (UK), சசிரேகா (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், நெய்த்தன், ஜொஹானன், அபிகேயில், ஜோஹாஸ், றித்திக், அலக்ஷன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான புஸ்பம் மகேஸ்வரி, அருட்சகோதரி பிறிசில்லா (தி.கு.க. மடம்), வினிபிறட், றெஜீனா மற்றும் போல் அருமைநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க இரங்கல் திருப்பலி புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் நாளை (19.10.2020) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா (பெரிய கோயில்) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**போல் தேவநாயகம் (கணவர்)**
**077 4244 049**
**எமிலியானுஸ்பிள்ளை**
**077 829 1081**

**4A, அச்சுக்கூட வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# தவறான திசையில் கோத்தாபய அரசு!

*தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கடும் தொனியில் எச்சரிக்கை*



**கொழும்பு, ஒக்.18**
**ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான அரசு திசைமாறிப் பயணிக்கின்றது. உடனடியாக விழித்துக் கொண்டு நேர் வழியில் பயணிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது தற்கொலைக்கு ஒப்பானதாக மாறி விடும்.**

இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பலவிதமான எதிர்ப்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே இந்த அரசுக்கு பெரும்பான்மையின மக்கள் அமோக ஆணையை வழங்கினர். இந்த அரசின் சிற்சில நடவடிக்கைகளானவை எம்மை அதிருப்தியடைய வைத்துள்ளன. புதிய அரசமைப்பை இயற்றுமாறு வலியுறுத்தப்பட்ட நிலையில், அவசர அவசரமாக 20ஆவது திருத்தச் சட்ட வரைபு கொண்டுவரப்பட்டது. 20ஆவது திருத்த வரைபை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்ளமுடியாது. திருத்தியமைக்குமாறு அழுத்தம் கொடுத்தோம். இன்னும் திருத்தப்படவில்லை. குழுநிலை விவாதத்தின் போதாவது நிச்சயம் திருத்தப்பட வேண்டும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். தவறான ஆலோசனைகளை உள்வாங்கவேண்டாம் எனவும் கூறிவைக்க விரும்புகின்றோம். அவ்வாறு தவறான ஆலோசனைகளை உள்வாங்கி நாட்டை தவறான திசையில் வழி நடத்தினால் அது தற்கொலைக்கு ஒப்பான செயலாகிவிடும். எமது இனத்துக்கும் அது பாதிப்பாக அமைந்துவிடும். அதனால்தான் விழித்துக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். என்றார். (எ-44)



## தனிப்படுத்தல் காலம் முடிந்தோர் வீடுகளுக்கு

வவுனியா, ஒக்.18
வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து 50 பேர் நேற்று வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டினர். அவர்களின் தனிமைப்படுத்தப்படுத்தல் காலம் முடிவடைந்த நிலையில் அவர்கள் இன்று வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (எ-18)

## கோத்தாவின் விஜயத்தால் கிடைத்தது மைதானம்

புத்தளம், ஒக்.18
மதுரங்குளி முன்மாதிரிப் பாடசாலையில் விளையாட்டு மைதான அபிவிருத்திப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜக்ச அந்தப் பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அதன் போது விளையாட்டு மைதானத்தை புனரமைத்துத் தருமாறு மாணவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய புணரமைப்புப் பணி இராணுவத்தின் பொறியியல் படையணியிடம் வழங்கப்பட்டது. முதல் 18 நாள் குறுகிய காலப்பகுதியில் மைதான நிர்மாணப் பணிகளில் சுமார் 90வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (வ-இ)



## இரத்ததான முகாம்

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இரத்ததான முகாம் நேற்று இடம் பெற்றது.

இலங்கை உளவியல் ஆலோசனை மையம் மற்றும் திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் 100க்கும்மேற்பட்ட குருதிக் கொடை யாளர்கள் பற்கேற்று இரத்ததானம் செய்திருந்தனர். (வ-40)



தமிழர்கள் மீதான அரசின் அடக்குமுறை

## தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்றும் கூடி கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஒக்.18
தமிழ் மக்கள் தொடர்பான அரசின் அடக்குமுறைப் போக்குக்கு ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகள் மேற்கொண்டுவரும் கூட்டு முயற்சி யின் தொடர்ச்சியாக நேற்றும் யாழ்ப்பாணத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் இளஞ்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி பிரமுகர் அருந்தவபாலன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். கடந்த கூட்டங்களில் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. கடந்த கூட்டங்களில் பங்கேற்காத நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (எ)

## மட்டு. பறவைகள் சரணாலயத்தில் தீ

*அணைப்புப் பணி தொடர்ந்தும் முன்னெடுப்பு*



மட்டக்களப்பு, ஒக்.18
மட்டக்களப்பு பறவைகள் சர ணாலயம் பகுதியில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாநகரசபையின் நுழைவாயிலில் பிள்ளையாரடி கொக்குவில் பகுதியில் உள்ள இயற்கை பறவைகள் சரணாலயம் பகுதியிலேயே இந்த தீ அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

நீண்ட நிலப்பரப்பினையும், சதுப்பு நிலங்களையும் கொண்ட இப் பகுதிக்கு உலகின் பல பாகங்களிலும் இருந்து ஒவ்வொரு காலநிலைக்கும் பலவிதமான பறவைகள் வந்துசெல்கின்றன.


அண்மைக்காலமாக இப்பகுதியினை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அரசினால் இப்பகுதி பறவைகள் சரணாலயம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ அனர்த்தம் காரணமாக சுமார் நான்கு ஏக்கருக்கு அதிகமான காடுகள் அழிந்துள்ளன. தீயினைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

தீப்பரவலால் அங்கிருந்த பறவைகள் வேறு பகுதிகளை நோக்கி சென்றுள்ள துடன், அந்தப் பகுதியில் இருந்த உயிரினங்கள் நீர்நிலைகளை நோக்கிச் சென்றமையும் காண முடிந்தது. (வ-இ)

## காலியில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று

காலி சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரோடு கொழும்பில் பணியாற்றியவர்களுக்குக் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவ ருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் அவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவரின் குடும்ப உறுப்பினர்களும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (வ-இ)



## காணிதேவை

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் காணிகள் தேவை

வெளிநாட்டில் வேலைபார்க்கும் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் காணி தேவை. அவர்களுக்கு காணி வாங்கி வீடு கட்டுவிப்பதற்கு

**வஜிர காணி விற்பனை மற்றும் வஜிர கட்டுமான நிறுவனம்**

(யாழ்ப்பாணத்தில் நல்லூர் கச்சேரி வீதியில் அமைந்துள்ளது)

*தரகு கொடுப்பனவுகள் அரவிடப்பட-மாட்டாது.

தொடர்புகளுக்கு உடனே அழையுங்கள்

**070 431 2356**

1916 ம் ஆண்டு தொடக்கம், 104 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிமாண துறையின்

## வஜிர ஹவுஸ்

தலைமை அலுவலகம்: 23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிட்டி

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வேலைக்கு பெண்பிள்ளைகள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் **கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுபிள்ளைகளுக்கான பொருட்கள் விற்பனை செய்யும்** நிறுவனத்திற்கு காலை 10.00 மணி தொடக்கம் இரவு 08.00 மணி வரைக்கும் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

**076 264 8766 , 021 221 3323**

## கிடாய் விற்பனைக்கு

கிடாய் ஆடு விற்பனைக்கு உண்டு.

**077 421 9729**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள 4 பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு

**077 421 3305, 077 439 4231**

## சமையல் ஆள் தேவை

தனிநபர் ஒருவருக்கு தினமும் 3 வேளை வந்து சமைத்து கொடுக்கக் கூடிய சமையல் ஆள் தேவை.

**தொடர்பு:**
**077 745 6550**

## வீடு வாடகைக்குத் தேவை

வவுனியாவில் வேப்பங்குளம், உக்கிளாங்குளம், பண்டாரிகுளம், நெளுக்குளம் பகுதியில் இரண்டு அறைகளுடன் கூடிய (இணைந்த குளியலறை Commord வசதிகளுடன்) தனி வீடு வாடகைக்கு உடன் தேவை.

**076 857 0689**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் 3 படுக்கை அறைகள், 2 குளியல் அறையுடன் கழிவறைகள் உடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. மாத வாடகை 20 000/= அல்லது 25 000/= முற்பணம் தரப்படும். மூன்று அங்கத்தவர் கொண்ட ஆங்கில ஆசிரியர்.

**077 766 8725**

## உதவி கணக்காளர் தேவை

யாழ் நகரில் வர்த்தக நிறுவனத்திற்கு வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த (DIPLOMA AAT/ CIMA/ MS EXCEL & WORD) முன் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

**yogajaffna001@gmail.com**

## Clearance Sale

யாழ் கோண்டாவிலில் பாவித்து சில மாதங்களே ஆன கட்டில்கள் (Single,Double), மேசைகள், Sofe (Dambro), சாப்பாட்டு மேசை, கதிரைகளுடன், அலுமாரிகள், Dressing Table, TV Stand, TV, Fridge,Washing Machine, water Pump, Air condition (Normal a Inverter), Plastic கதிரைகள் மற்றும் பல தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

30% Discount

**077 301 3659, 077 254 3113**

## தீயில் கருகிய வாகனங்கள்

கொழும்பு, ஒக். 18

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுனாமி வீட்டுத்திட்டத்தின் கிறீன்பீல்ட் தொடர்மாடிக் குடியிருப்பில் உள்ள வாகனங்களுக்கு மர்ம நபர்கள் நேற்றுமுன்தினம் தீ வைத்துள்ளனர்.

இதனால் 3 மோட்டார் சைக்கிள்கள் உட்பட சிறுவர்களின் 5 சைக்கிள்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

மின்சார சபைக்குச் சொந்தமான மின் மானிகளும் தீயில் சேதமடைந்துள்ளன. எனினும், வேறு பாதிப்பு ஏற்படவில்லை. பொலிஸார் விசாரணை நடத்தினர்.

(கு-இ)

## தேவை

மொரிஸ் 1100 (MORRISS1100) காரின் புத்தகம் இருப்பவர் தொடர்பு கொள்ளவும். நல்ல விலைக்கு வாங்கப்படும்.

**போன்: 077 934 7705**

## விற்பனை

யாழ் கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 2 பரப்பும் 6 குழி காணியும், யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டுப் பணி செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
நேரம் 7.00-2.00

**071 871 6449**

## வீடு வாடகைக்கு தேவை

கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், அச்சுவேலி மற்றும் யாழ்ப்பாணம் - KKS வீதி, கஸ்தூரியார் வீதி, மானிப்பாய் வீதி ஆகிய இடங்களில்வீடு வாடகைக்குத் தேவை.

**077 468 2951, 077 408 3656**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சீனிவாசம் வீதியில் 2 பரப்பும், கோண்டாவில் இராஜ வீதி சந்திக்கு அருகில் பிரதான வீதியில் 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு

**077 601 1135**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை
AAA Gold Centar

**076 568 4346**

## வேலையாள் தேவை

சுன்னாகத்தில் 3 வயது ஆண்பிள்ளையை பராமரிக்க **பணிப்பெண்** தேவை.
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

**076 209 9227**


ABI Fashion World

## அபி பஷன் வேல்ட் இன்

**தீபாவளி மெகா சிறப்பு விலைக்கழிவுகள்...**



தித்திக்கும் இன்ப தீபாவளியை மகிழ்வுடன் வரவேற்போம்

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

அபி பஷன் வேல்ட் வழங்கும் சிறப்பு விலைத்தள்ளுபடிகள்

**19.10.2020 முதல்**
**14.11.2020 வரை**

இதோ உங்களுக்காக

ஒன்று வாங்கினால் அதேபெறுமதியில் இன்னும் ஒன்று முற்றிலும் இலவசம்

ஏனைய புடைவை வகைகள் 30% முதல் 50% வரையான சிறப்பு விலைக்கழிவு




வாருங்கள் முந்துங்கள் அதிரடி விலைத்தள்ளுபடிகளை அனுபவித்திடுங்கள்

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 3738, 071 8444 333**



வவுனியா மாநகரில்...

கோலாகலமாக ஆரம்பிக்கப்படவுள்ளது

## ஜெய் ராம் செரமிக்

எதிர்வரும் 21.10.2020 புதன்கிழமை காலை 10.30 மணி சுபவேளையில் கோலாகலமாக திறந்துவைக்கப்படவுள்ளது .

எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட வீடு, குளியலறைகளுக்கான தரை ஓடுகள், குளியலறைச் சாதனங்கள், சீலிங் பொருட்கள், மற்றும் சுவர்ப்பூச்சுக்கள் என்பனவற்றுடனான காட்சியறையுடன் கூடிய விற்பனை நிலையம் திறந்துவைக்கப்படவுள்ளது .



உங்கள் அனைவரையும் எங்கள் ஸ்தாபனத்திற்கு வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

இல . 07 , முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா
0771853478, 0778001081

உரிமையாளர்:
திரு. ச. சதீஸ்குமார், ம. கைமன்

### தமிழ்த் தேசியக்...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் அண்மையில் காணொலி உரையாடலை மேற்கொண்டிருந்தார். அதில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அகற்றும் முனைப்பில் ராஜபக்ச அரசு ஈடுபட்டுள்ள நிலையில் மோடியின் இந்த அறிவிப்பு கொழும்பு அரசுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. இதன் பின்னர் சீனாவுடன் ராஜபக்ச அரசு நெருக்கத்தை காண்பிக்கத் தொடங்கியது. இலங்கை விவகாரத்தில் சீனாவின் அணுகுமுறை தொடர்பில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் விமர்சனங்களை முன்வைத்திருந்த பின்னணியில், சீன உயர்மட்டக் குழுவின் திடீர் பயணம் அமைந்திருந்தது. இலங்கையுடன் நெருக்கமான உறவைப் பேணுவதாக காண்பிக்கும் வகையில் இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தொடர்ச்சியாக ருவிட்டரில் பதிவுகளையும் வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் இந்திய அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பேச்சுக்கான அழைப்பை டில்லி விடுத்துள்ளது. காணொலி ஊடாக இந்தப் பேச்சு விரைவில் நடைபெறவுள்ளது. இந்திய அரசின் உயர் மட்டத்தினர் டில்லி தரப்பின் கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்ட பல தரப்புக்களுடன் காணொலி ஊடான சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஓ,5,22)

### சிப்பாய் சாவு...

எடுத்து தன்னைத் தானே சுட்டு உயிரை விட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதி காலை நடந்துள்ளது. வேரஹம (வயது-29) என்ற லான்ஸ் கோப்ரலே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸாரும், பளைப்பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த இராணுவச் சிப்பாய் பெண் ஒருவரைக் காதலித்த தாகவும், அவர் தொடர்பைத் துண்டித்த தால் இந்தத் தவறான முடிவு எடுத்தார் என்றும் விசாரணையில் கூறப்படுகின்றது. (எ,ஓ,6,159)

### வாள்வெட்டில்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். முதியவரின் வீட்டுக்கு 2 மோட்டார் சைக்கிளில் சென்ற 4பேர் கொண்ட குழுவினர் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஓ,20)

### கோப்பாய்...

இந்த விபத்து நடந்துள்ளது.

கருணாரட்ணம் கருணானந்தன் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார். டிப்பர் வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர்மோதிவிபத்துக்குள்ளாகின என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்தவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துத் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ,ஓ,111,26)

### குழப்பவாதி...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இருந்தார். இக்கட்டான நேரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டங்கள் கூடிய போது வராத அவர், இப்போது சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்புடன் கூட்டத்துக்கு வருகின்றார். அவரால் குழப்பங்கள் ஏற்படும் என்பதாலேயே கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவித்தார் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவரும், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான திருமதி அனந்தி சசிதரன்.

தமிழ் மக்கள் தொடர்பான அரசின் அடக்குமுறைப் போக்குக்கு ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகள் மேற்கொண்டு வரும் கூட்டு முயற்சியின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு வந்திருந்த அனந்தி சசிதரன், பின்னர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்திருந்தார். அது தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த கூட்டங்கள் மிகவும் அவசர நிலைமையில் நடைபெற்றன. அப்போது முக்கியவிடயங்கள் தொடர்பாகத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்துக்கு வரவில்லை. இப்போது அவர் சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்புடன் கூட்டத் துக்கு வருகின்றார். கடந்த காலங்களில் கூட்டமைப்பில் குழப்பங்கள் ஏற்படப் பிரதான காரணம் அவரே. அவரால்தான் கூட்டமைப்பில் இருந்தவர்கள் வெளியேற நேர்ந்தது. தமிழ் மக்களின் ஒற்றுமை குலைந்தது. இப்போதும் அவரால் குழப்பங்கள் ஏற்படலாம். அதனாலேயே அங்கிருந்து நான் வெளியேறினேன் என்று தெரிவித்தார் திருமதி அனந்தி சசிதரன். (எ,ஓ,26)

### மற்றொரு...

பாய்க்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான இரண்டு கடற்படைச் சிப்பாய்களும் பயணம் செய்த விவரங்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுடன் பயணித்தவர்களை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் 021 222 6666 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

21வயதான பெண் கடற்படை உத்தியோகத்தர் கடந்த 4ஆம் திகதி காங்கேசன் துறை புகையிரத நிலையத்திலி ருந்து கொழும்பு நோக்கி செல்லும் புகையிரதத்தில் 3ஆம் வகுப்பு பெட்டியில் அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டுள்ளார். காலை 11.30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தைச் சென்றடைந்துள்ளார்.

அதே தினம் பிற்பகல் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து 4 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறைக்கு வரும் புகையிரதத்தில் 3ஆம் வகுப்பு பெட்டியில் பிரயாணம் செய்து இரவு 11 மணிக்கு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதே கடற்படை முகாமைச் சேர்ந்த 31 வயதான ஆண் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கடந்த மாதம் 27ஆம் திகதி பதுளை மாவட்டத்திலி வெலிமடையில்; உள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் சென்றுள்ளார். கடந்த 6ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு புறப்பட்டு கண்;;;டி நகரத்தை காலை 11 மணிக்கு சென்றடைந்துள்ளார். அங்கிருந்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் 11.40 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தை வந்தடைந்துள்ளார். மீண்டும் அங்கிருந்து மாலை 6.50 மணிக்கு காங்கேசன்துறைக்கு செல்லும் தனியார் பேருந்தில் பயணித்து இரவு 7.40 மணிக்கு காங்கேசன்துறையை அடைந்துள்ளார். மேற்குறிப்பிட்ட புகையிரத வண்டிகளில் 3ஆம் வகுப்பு பெட்டிகள் மற்றும் பேருந்துகளில் கடற்படை உத்தியோகத்தர்களுடன் பயணித்தவர்கள் வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்பிலுள்ள 0212226666 என்ற இலக்கத்தை தொடர்புகொண்டு விவரங்களை அறியத்தரவும்.

பயணம் செய்தவர்களின் விபரங்களை அறிவிப்பதன் மூலம் உங்;களுக்கு கொரோனாத் தொற்று உள்ளதா எனப் பரிசோதித்து அறியவும் உங்களது குடும்பங்களையும் அயலவர்களையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய அவசர சேவைகளை உடனடியாக வழங்குவதற்கும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்நோய் எமது மாவட்டத்தில்; பரவாதிருக்க பயணம் செய்தவர்கள் அச்சமின்றி உங்களின் தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். என்றுள்ளது. (ஓ,இ)

### குடத்தனையில்..

ஒருவருக்கு கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவருடன் நெருங்கிப் பழகியோர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அவரிடமிருந்து பி.சி.ஆர். சோதனைக்குரிய மாதிரிகள் மீளப் பெறப்பட்டு சோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்தப் பகுதியில் நடைபெறும் வீதிச் சீரமைப்புப் பணிகளில் தனியார் நிறுவனம் ஒன்று ஈடுபட்டுள்ளது. அதற்காக வெளி மாவட்டத் தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர். அவர்கள் குடத்தனைப் பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் 3 நாள்களின் முன்னர் குருநாகலில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று திரும்பியுள்ளார். அவருக்கு இருமல், காய்ச்சல் காணப்பட்டதை அடுத்து பருத்தித்துறை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்றுள்ளார். அவருக்கு அங்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது அவரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் போதாது என்பதால் மீளவும் மாதிரிகள் பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவருடன் அங்கு நெருங்கிப் பழகிய ஒருவருக்கும் காய்ச்சல் அறிகுறி நேற்றுத் தென்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இங்கு பணிக்காக வந்துள்ள 73பேருக்கும்பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ,ஓ,5,26)

### 2000...

தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நேற்று இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 121 பேரும் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் ஆவர்.

தனிமைப்படுத்தலில் இருந்தவர்களும், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுமே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து மினுவாங்கொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் 2 ஆயிரத்து 14 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 475 ஆக அதிகரித்துள்ளது. அதில் 3 ஆயிரத்து 395 பேர் குணமடைந்துள்ளனர். 2 ஆயி ரத்து 67 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஓ,22)

### ரிஷாத் கைது..

இருக்கின்றது. இவ்வாறு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

ஆளுந்தரப்பின் முக்கிய தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரிஷாத் பதியுதீன் மீது தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டும், அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. அதையடுத்தே அவரைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

ரிஷாத்தைக் கைதுசெய்யப் பொலிஸார் விரைந்தபோது அவர் ஓடி மறைந்துள்ளார். அவரைத் தேடும் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

ரிஷாத்தைக் கைது செய்யும் நடவடிக்கைக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இது அரசின் திட்ட... அரசியல் பழிவாங்கல் என்று எதிர...னர் கூக்குரல் இடுவதைப் பார்க்கும் போது சிரிப்பாக இருக்கின்றது. ரி...த் விவகாரம் நீதித்துறை சம்பந்தப்... இதில் எவரும் தலையிட முடி... ரிஷாத் குற்றவாளியா? இல்லை... என்பதை நீதிமன்றம்தான் தீர்மா... வேண்டும். அது தொடர்பில் நா... மானிக்க முடியாது. என்றார். (ஓ...

### ரிஷாத்தை கைது...

காப்பு செயலர் மேஜர் ஜெனரல் க... குணரத்ன பொதுமக்களை கே... கொண்டுள்ளார். இந்த விவகார... ஜனாதிபதி பாதுகாப்பு செயலர் உ... பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்போரை இலக்கு வைத்து மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மக்களின் கவலைகள் புரிந்துகொள்ளக் கூடியவை என்றாலும், இந்த கைதுகளை மேற்கொள்வதில் பொலிஸார் பின்பற்ற வேண்டிய ஒரு வழிமுறை உள்ளது என கூறினார்.

ரிஷாட் பதியுதீனிடம் இருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ய திட்டமிட்டிருந்த போதும் துரதிர்ஷ்டவச மாக, அந்தச் செய்தி ஊடகங்களில் வெளியாகி ஊடகங்கள் மூலம் பொதுமக்கள் தெரிந்துகொண்டனர். இருப்பினும், அவர் கைது செய்யப்ப...ள்ளதாக செய்தி வெளியானதும், அ...ர் தலைமறைவாகிவிட்டார் என கமால் குணரத்ன தெரிவித்தார். இப்போது அவரது சட்டத்தரணிகள் ரிட் விண்ணப்ப...தை தாக்கல் செய்துள்ளனர். எவ்வா... னும் ரிஷாத் பதியுதீன் விரைவில் ... செய்யப்படுவார் என்று அவர் உ... ளித்தார். பதியுதீன் அல்லது அ... கூட்டாளிக ளுக்கு எந்த கருணை... காட்ட தாங்கள் விரும்பவில்லை... தெரிவித்த கமால் குணரத்ன பா... பட்டவர்களுக்கு நீதியை உறுதி... வேண்டும் என்றும் அவரைக் கண்... போம்என்றும்குறிப்பிட்டார்.

# ரணில் அரசைக் காப்பாற்றுவதற்காகவே முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகினர்

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் கபீர் ஹாஷிம் சாட்சியம்

**கொழும்பு, ஒக். 18**

**நல்லாட்சி அரசில் இருந்த முஸ்லிம் அமைச்சர்கள் என்றும் அனைவரும் ஒரே நாளில் பதவி விலகியமை ரிஷாத் பதியுதீனைப் பாதுகாக்க அல்ல என்றும், ரணில் தலைமையிலான அரசை காப்பாற்றவே அவ்வாறு செய்தனர் என்றும் முன்னாள் அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் அவர் வழங்கிய சாட்சியத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்ட ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்தது. ஆனால் அது உண்மையில் அப்போதைய அரசுக்கு எதிரானது என்று கபீர் ஹாசிம் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக்கட்சியினரும் வாக்களித்திருந்தால், அது முழு அரசையும் மாத்திரமல்ல. அந்த நேரத்தில் நாட்டின் ஸ்திரத்தன்மையையும் பாதித்திருக்கும் என்று முன்னாள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெளிவுபடுத்தியதாகக் குறிப்பிட்ட கபீர் ஹாசிம், அமைச்சர் பதியுதீன் பதவி விலக விரும்பவில்லை. எனவேதான் முஸ்லிம் அமைச்சர்கள் பதவிவிலகினர் என்றும் குறிப்பிட்டார்.

அதாவது, நல்லாட்சி அரசில் பணியாற்றிய முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின்போது பதவி விலகினர். அந்த நடவடிக்கை, அவரைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசைப்பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டது. என்று அவர் சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார். (து-இ)

## மைக் பொம்பியோவின் பயணம் எப்போது என்று முடிவில்லை

கொழும்பு, ஒக். 18

அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணம் இன்னமும் உறுதியாகவில்லை என அமெரிக்க தூதரகத்தை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீன உயர் மட்ட அதிகாரிகளின் அண்மைய வருகைக்குப் பின்னர், அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவும் இந்த மாத இறுதியில் கொழும்புக்கு வருவார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தநிலையில் மைக் பொம்பியோவின் வருகை குறித்து அமெரிக்க தூதரகம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளதா என குறித்த ஆங்கில ஊடகம் வினவியுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள தூதரகம், "இந்த நேரத்தில் எந்த உத்தியோகபூர்வ பயணமும் உறுதிப்படுத்தப்படவில்லை. பயணம் உறுதிசெய்யப்பட்டவுடன் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும்" என பதிலளித்துள்ளது.

அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்த மைக் பொம்பியோ 2019 ஜூன் மாதம் கொழும்புக்கு செல்லத் திட்டமிட்டிருந்தார் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். இருதரப்பு பேச்சுகளின்போது, பயங்கரவாதத்தை எதிர்ப்பது மற்றும் 480 மில்லியன் மிலேனியம் சவால்கள் ஒப்பந்தம் தொடர்பில் விவாதிக்க நம்பிக்கை கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)

## தொடர்ச்சிகள்.....

### அபிவிருத்தி...

குழந்தை பிரசவிப்பதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் குழந்தையை இழந்துள்ளார். இந்தச் சம்பவம் அனைவரையும் மனவுளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை வலியுறுத்தி வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் நாளை திங்கட் கிழமை சுகவீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் வடமாகாணத்தில் உள்ள மத்திய மற்றும் மாகாண சேவைகளில் கடமையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கொண்ட தொழிற்சங்கமாகும். நாளை திங்கட்கிழமை வடமாகாணம் தழுவிய ரீதியில் சுகவீன விடுமுறைப்போராட்டத்தை நடாத்த தீர்மானித்துள்ளோம்.

தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தினமும் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டிலிருந்து கடமைக்காகச் சென்றுவந்த நிறைமாதக் கர்ப்பிணியான அபிவிருத்தி உத்தியோகத்தர் தனக்கான தற்காலிக இடமாற்றத்தை இரண்டு தடவைகள் கோரியிருந்தும் அது திணைக்கள தலைவரால் மறுக்கப்பட்டதன் காரணமாக தொடந்தும் தனது பிரயாணத்தை மேற்கொண்ட நிலையில் அவர் தனது குழந்தையை பிரசவிப்பதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் இழந்துள்ளார். இது போன்ற சம்பவங்கள் பல அவ்வப்போது வடமாகாணத்தில் இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

இத்துன்பியல் நிகழ்வு அரச உத்தியோகத்தர்களாகிய அனைவரையும் மிகுந்த மனவுளைசலுக்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்றம் கோரிய சந்தர்ப்பத்தில் அது மனிதாபிமான அடிப்படையில் அணுகப்பட்டிருப்பின் இழப்பை தவிர்த்திருக்க முடியுமென நாம் கருதுகின்றோம். இவ் மனிதாபிமானமற்ற செயலை கண்டித்தும் இனி வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதனை உரிய அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டுமென்ற அடிப்படையிலும் இவ் சுகவீன போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இச்சம்பவத்தை தனியொரு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மாத்திரம் நடந்த விடயமாக கருதாமல் எந்தவொரு அரச உத்தியோகத்தருக்கு நடந்திருந்தாலும் அதனை நாம் மனிதாபிமான முறையில் அவசியமாக அணுகவேண்டுமென்ற அடிப்படையில் இந்தப் போராட்டத்துக்கு வடமாகாணத்தில் காணப்படும் அனைத்து அரச சேவையாளர்களது தொழிற்சங்கங்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து வலுச்சேர்க்கக் கூடிய வகையில் சுகவீன விடுப்பை அறிவித்து ஆதரவு தருமாறு வேண்டுகின்றோம், என்றுள்ளது. (ஒ,20)

### வவுனியாவில்....

ஒருவர் படுகாயங்களுடன் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணிக்கர்வளவு கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சபையின் தலைவரான கோபால் குகதாசன் (வயது40) என்பவரும், முல்லைத்தீவு கரிப்பட்டமுறிப்பைச் சேர்ந்த சிவனு மகேந்திரன் (வயது34) என்பவருமே கொல்லப்பட்டுள்ளனர். கோபால் குகதாசன் 4 பிள்ளைகளின் தந்தை. இவர் முன்னாள் போராளி என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சுப்பிரமணியம் சிவாகரன் என்பவரே படுகாயமடைந்துள்ளார். அவரும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களின் தலைகளில் பெரும் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன. படுகாயமடைந்தவரும் கடும் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாணிக்கர்வளவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த இளைஞர் இன்று காலை கொலைச் சம்பவம் நடந்த வீட்டுக்கு அண்மையில் உள்ள வீடொன்றுக்குச் சென்று, தான் இருவரைக் கத்தியால் வெட்டிவிட்டேன் என்று கூறியுள்ளார். கத்தி ஒன்றையும் அங்கு கைவிட்டுச் சென்றுள்ளார்.

அந்த வீட்டிலிருந்தவர்கள் ஓடிச் சென்று பார்த்தபோதே மூவர் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர். அதையடுத்து அவர்கள் உடனடியாக அந்தப் பகுதியில் போக்குவரத்துக் கடமையில் இருந்த பொலிஸாரிடம் தகவலைத் தெரிவித்துள்ளனர். போக்குவரத்துப் பொலிஸார் உடனடியாக அந்த இளைஞரைப் பிடித்துள்ளனர். அதன்பின்னர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அங்கு வந்தபின்னரே குற்றுயிராக இருந்த சிவாகரன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

உயிரிழந்த இருவரும், படுகாயமடைந்தரும் உறவினர்கள் என்று சொல்லப்படுகின்றது. சம்பவம் நடந்த வீட்டைச் சுற்றிலும் மதுப் போத்தல்கள் அதிகம் காணப்படுகின்றன. மதுபோதையில் இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளதா என்ற கோணத்திலும் பொலிஸ் விசாரணைகள் நடைபெறுகின்றன. சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா நீதவான் சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். சடலங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு வவுனியா பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கொலைக்கான காரணம் சரிவர வெளியாகவில்லை. கைது செய்யப்பட்டவரிடம் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அதன்பின்னரே கொலைக்கான காரணம் தெரியவரும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ,ஒ,110)

## ஓராண்டு நிறைவுக்குள் புதிய அரசமைப்பு வரும்

### தற்போது கைகள் கட்டப்பட்டுள்ளன என்கிறார்·ஜனாதிபதி கோத்தாபய



கொழும்பு, ஒக். 18

தனது முதலாவது பதவியாண்டு நிறைவு தினத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

19ஆவது திருத்தத்தை வைத்துக்கொண்டு தன்னால் எதனையும் செய்யமுடியாது என்று கூறிய அவர், மிக விரைவில் 20ஆவது திருத்த யோசனையை நிறைவேற்றிவிட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.


அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற 20ஆவது திருத்த யோசனை மற்றும் புதிய அரசமைப்புப் பணிகள் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துகின்ற சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்சமயம் நடைமுறையில் உள்ள 19ஆவது திருத்தத்தால் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் 20ஆவது திருத்த யோசனையை முடிந்தளவில் நிறைவேற்ற வேண்டும். அராஜகத்தை எதிர்க்கின்ற, அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்கின்ற வகையிலான புதிய அரசமைப்புத்தான் தேவையாக இருக்கிறது. இரண்டாவது பதவியாண்டு ஆரம்பிக்கும் முன்னர் புதிய அரசமைப்பை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 20ஆவது திருத்த யோசனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் குறித்த உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவிக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு நாள்கள் அந்த யோசனை மீது விவாதம் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (து-இ)

# வில்லியர்ஸ் காட்டடி தர்பார் ராஜஸ்தான் துயரத்தோல்வி!



துபாய், ஒக். 18

ஐ.பி.எல் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில், வில்லியர்ஸின் கடைசிநேரக் காட்டடியால் த்ரில் வெற்றிபெற்றது பெங்களூர்.

ஐ.பி.எல் கிரிக்கெட் திருவிழாவின் நேற்று நடைபெற்ற 33ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. ராஜஸ்தான் அணி சார்பாக உத்தப்பா - ஸ்ரோக்ஸ் இணை நிதானமான ஆரம்பம் வழங்கியது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 50இனைத் தொட்டவேளை ஸ்ரோக்ஸ் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதிரடி காட்டிய உத்தப்பா 22 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சாம்சன் 9 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் அடுத்து ஜோடி சேர்ந்த ஸ்மித் - பட்லர் இணை அணியை ஸ்திரத்தன்மைக்கு அழைத்துச் சென்றது. ஸ்மித் (36), பட்லர் (24), திவெட்டியா (19) ஓட்டங்களை பெற ராஜஸ்தான் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பெங்களூர் அணி சார்பாக மொறிஸ் 4, சாகல் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

178 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக படிக்கல் - பிஞ்ச் களமிறங்கினர். அணி 23 ஓட்டங்களைப் பெற்றவேளை பிஞ்ச் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 2ஆவது விக்கெட்டுக்காக படிக்கலுடன் ஜோடி சேர்ந்த கோலி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து செல்லும் முயற்சியில் ஈடுபட்டார். எனினும் அணி 102 ஓட்டங்கள் பெற்ற வேளை கோலி (43), படிக்கல் (35) ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அதன்பின் களம் புகுந்த ஏ.பி.டி வில்லியர்ஸ் வாணவேடிக்கை காட்டினார்.





பெங்களூர் அணி 19.4 பந்துப்பரிமாற்றத்தில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. வில்லியர்ஸ் 22 பந்துகளில் 55 ஓட்டங்களையும் குர்கிறீத் சிங் 19 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்துவீச்சில் ராஜஸ்தான் அணி சார்பாக ஸ்ரேயர்ஸ் கோபால், தியாகி, தேவதியா தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஏ.பி.டி வில்லியர்ஸ் தெரிவானார். (ம)



# சென்னையை த்ரிலாக வீழ்த்தி பட்டியலில் டில்லி முதலிடம்



சார்ஜா, ஒக். 18

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸை வீழ்த்தியது டெல்லி. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 17 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இடதுகை வீரருக்கு பந்துவீச்சை சரியான முறையில் வெளிப்படுத்தத் தவறும் ஜடேயாவை பந்துவீச அழைத்து தோல்விக்குக் காரணகர்த்தாவாக இருந்தார் டோனி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக சாம் கரன் மற்றும் டுபிளஸிஸ். ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார் சாம் கரன். இந்த இலக்குச் சரிவு சென்னை அணியின் ஓட்டவேகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முதல் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சென்னை அணி வெறும் 47 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதன் பின்னர் படிப்படியாக அதிரடியை ஆரம்பித்தது சென்னை. அணி 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வற்சன். அரைச்சதம் கடந்தார் டுபிளஸிஸ். 58 ஓட்டங்களுடன் டுபிளஸிஸ் ஆட்டமிழந்தார். இதற்காக அவர் 47 பந்துகளை எடுத்துக்கொண்டார். டோனி வெறும் 3 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். கடைசிக்கட்டத்தில் ஜடேயா மற்றும் ராயிடு இணைந்து அதிரடி காட்டினர். ராயிடு 25 பந்துகளில் 45 ஓட்டங்களையும், ஜடேயா 13 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர். முடிவில் சென்னை அணி 4 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் நோட்ரிஜி 2 இலக்குகளையும், டெஸ்பென்டி, ரபாடா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



120 பந்துகளில் 180 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கியது டெல்லி. ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார் பிருத்வி ஷா. ரகானே 8 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அணித் தலைவர் ஸ்ரேயாஸ் 23 பந்துகளில் 23 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். இவ்வாறு ஒருமுனையில் சரிவுகள், தொய்வுகள் இருந்தாலும் தவான் மறுமுனையில் நிலைத்துநின்று போராட்டம் காட்டினார். ஸ்றொய்னிஸ், தவான் இணைந்து சென்னையின் வெற்றியைக் கேள்விக்கு உட்படுத்தினர். இதற்கிடையில் மூன்று முத்தான வாய்ப்புக்கள் தவானுக்குத் தவறவிடப்பட்டன. 24 ஓட்டங்களுடன் ஸ்றொய்னிஸ் ஆட்டமிழந்தார். மறுமுனையில் மிரட்டலாகச் சதம் கடந்தார் தவான். இதற்காக அவருக்கு 57 பந்துகளே தேவைப்பட்டன. இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் 17 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. பந்து ஜடேயாவின் கைகளுக்குள் திணிக்கப்பட்டது. அடுத்தடுத்து மூன்று சிக்சர்களை விளாசி அணியை வெற்றிபெற வைத்தார் அக்சர் பட்டேல். தவான் 58 பந்துகளில் 101 ஓட்டங்களுடனும், அக்சர் பட்டேல் 5 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர். தவான் ஆட்ட நாயகனானார். (ம)






இ... திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.